பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று.

AGENTS FOR LOCAL, MOFUSSIL & FOREIGN JOURNALS





| | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா ... ... ... | 3—0 |
| 6 மாத சந்தா ... ... ... | 1–12 |

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

| | ரூ. அ. |
|---|---|
| வெளி நாட்டிற்கு சந்தா ... | 4—0 |
| விளம்பரம் அங்குலம் 1-க்கு ... | 0—8 |

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷம் ஆனி மீ 13-உ (27—6—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 9.



## உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும்; அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன், காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை ஜாபிதாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி

## பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I Ry.

## "தொழிலாசிரியன்"

தொழில் முறைகளைக் கற்பிக்கும்
ஓர் மாதாந்திரத் தமிழ் சஞ்சிகை.

நம் தேச முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்வி, கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், வியாபாரம், வைத்தியம், மாந்திரீகம், ஜோதிஷம், இந்திரஜாலம், (Magic) மெஸ்மரிஸம், ஹிப்னாட்டிஸம், ஏழைகள் பணக்காரராவதற்குத் தகுந்தயோஜனைகள் முதலிய அரிய பெரிய விஷயங்கள், பல வித்வசிரோன்மணிகளால் எழுதப்பெற்று மாதம் தவாமல் வெளிவந்துலாவுமாதலால், இன்றேதாங்களும் சந்தாதாராகச் சேர்ந்து ஆதரிப்பீர்களென நம்புகிறோம்.

இதன் வருட சந்தா ரூ. 2—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 3—0—0
மாதிரி காப்பி இனாம்.
விளம்பர விகிதம் மிகவும் குறைவு!

காரியஸ்தர்:—
"தொழிலாசிரியன்" கார்யாலயம்,
சிவகங்கை, S. India.

## திருப்பூர்

## சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு

## அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

# கோவை ஜில்லா கம்மவார் மகாநாடு.

## நடவடிக்கைகளின் விவரம்.

கோயமுத்தூர் ஜில்லா கம்மவார் இரண்டாவது மகாநாடு 12, 13-6-26 தேதிகளில் காடிபாவி கிராமத்தில் தக்ஷண கம்ம சங்கத்தைச் சேர்ந்த இராமனுதபுரம் ஜில்லா ஸ்ரீமான் எஸ். இராமசாமி நாயுடு, அவைத் தலைமையின் கீழ் நடை பெற்றது. மகாநாட்டிற்காக பிரத்தியேகமாய் ஒரு கொட்டகை தயார் செய்து அலங்கரிக்கப்பட்டிருந்தது. பிரதிநிதிகள் கோயமுத்தூர் ஜில்லாவில் பல பாகங்களிலிருந்தும் ஏராளமாய்க் கூடியிருந்ததுடன் வெளி ஜில்லாக்களிலிருந்து சிலரும் வந்திருந்தார்கள். விஜயம் செய்திருந்த கம்மவார் பிரபலஸ்தர்களுள் சென்னை ஸ்ரீமான்கள் பி. பக்தவத்ஸலுநாயுடு, பி. எஸ். ஜி. வேங்கடசாமி நாயுடு, எஸ். ஜி. குருசாமி நாயுடு, வி. அரங்கசாமி நாயுடு, எஸ். ஜி. லக்ஷ்மிநாராயணசாமி நாயுடு, போடிப்பட்டி எஸ். அரங்கசாமிநாயுடு, கணபதிபாளையம் டி. நாராயணசாமி நாயுடு, அத்திபாளையம் என். இராமகிருஷ்ண நாயுடு, காணூர் வெங்கிடசாமி நாயுடு, ஏ. ஆர். குருமூர்த்தி நாயுடு, வி. இலக்ஷ்மிநரசிம்மலு நாயுடு, இ. பாலகிருஷ்ணசாமி நாயுடு, ஆர். வி. இலக்ஷ்மி நாயுடு, டாக்டர் வேலப்பநாயுடு ஐ. புருஷோத்தம் நாயுடு, டாக்டர் சி. வி. என். நாயுடு, வி. பானுசாமி நாயுடு, கோயமுத்தூர் ஆந்திரா பிராக்கிரஸிவ் யூனியன் சி. வி வரதய்யா முதலியோர் முக்கியமானவர்கள் உபசரணைக் கமிட்டித் தலைவர் காடிபாவிபுதூர் ஸ்ரீமான் கே. கிருஷ்ணசாமி நாயுடு வரவேற்புப் பத்திரம் படித்தார்.

அவரது வரவேற்புப் பத்திரத்தில் பண்டை நாளில் கம்மவாரிருந்த பெருமையும் குலப்பெயரை நன்கு எடுத்துக் காட்டியும், அக்குலமக்கள் வதியும் நிலப்பரப்பினைப்பற்றியும் தற்காலம் அக்குலத்தவருள்ள நிலைமையையும் இனிச்செய்யவேண்டிய வேலையைப்பற்றியும் சிக்கனம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கல்வி, பெண் கல்வி, தெலுங்கு, சமூக சீர்திருத்தம், கிராம சீர்திருத்தம் முதலிய விஷயங்களைப் பற்றியும் நன்கு மிக விரிவாய்ப் பல்லோரும் போற்றத்தக்க விதமாய் பொறிக்கப்பட்டிருந்தது.

பின்பு ஸ்ரீமான் எஸ். இராமசாமி நாயுடு அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நீண்ட கரகோஷத்தினிடையே எழுந்து குல முன்னேற்றத்திற்கு வேண்டிய பல மேதக்க நோக்கங்கொண்ட விஷயமடங்கிய முன்னுரைப் பிரசங்கம் செய்தார். அதன் பின்பு விஷயாலோசனைக் கமிட்டிக்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் நாள் கான்பரன்ஸ் இனிது கலைந்தது. விஷயாலோசனைக் கமிட்டி இரவு ஒன்பது மணி வரை தீர்மானங்களையெல்லாம் கவனித்து ஒரு முடிவுக்கு வந்தது.

ஞாயிற்றுக் கிழமை காலை மறுபடியும் மகாநாடு கூடியது. முதல் நாள் கூடியிருந்ததைவிட கூட்டம் அதிகமாகவே யிருந்தது. பல தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேறின. அவையாவன:--

### தீர்மானங்கள்.

தேசத்திற்கென்றே ஊழியம் செய்து உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்த தேசாபிமானிகளான ஸ்ரீமான் தேசபந்து சித்தரஞ்சன தாஸ், தியாகராய செட்டியார், வா. வெ. சு. அய்யர், வி. எம். தங்கபெருமாள் பிள்ளை, செட்டிபாளையம் அய்யாசாமி கவுண்டர், கம்மவார் மகாநாட்டு காரியதரிசியாயிருந்த பி. ஜி. வெங்கிடசாமி நாயுடு முதலியவர்கள் காலஞ் சென்றமைக்கு இம் மகாநாடு மிகவும் அனுதாபப்படுகிறது.

எல்லாரும் நூல் நூற்கும் கைத்தொழிலை கைக்கொள்ள வேண்டும் என்றும் எல்லோரும் கதராடை அணிந்து கதரை அபிவிருத்தி செய்யவேண்டு மென்றும் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

நமது சமூக முன்னேற்றத்திற்கு சௌகரியமான இடங்களில் பாங்குகள் வைக்க நம்மவர்கள் முன் வரவேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. (இந்த விஷயத்தை கவனித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஒரு கமிட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டது.)

நமது சமூகத்தார் பிற மதங்களில் சேர்ந்து மறுபடியும் நம் மதத்தில் சேர விரும்பும் பக்ஷத்தில் யாதொரு நிபந்தனையுமில்லாமல் சேர்த்துக்கொள்ள வேண்டு மென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

நமது சமூகத்தார் கல்வியில் பின்னடைந்தவர்களாகையால் ஆங்கிலம் கற்றவர்களுக்கு சர்க்கார் உத்தியோக நியமன திட்டங்களில் அதிக சலுகை காட்டவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

கோவை ஜில்லாவில் நமது சமூகத்தாருக்கென தனியாக ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது. (இதற்கு வேண்டிய ஏற்பாடுகள்செய்ய ஒரு கமிட்டியும் தேர்ந்தெடுக்கப்பட்டது.)

நீலகிரி தாலுகாவில் ஏற்பட்டிருக்கிற பைக்காரா நீர் விழ்ச்சியிலிருந்து ஏற்படுகிற மின்சார சக்தியைக்கொண்டு கிணறுகளுக்குத் தண்ணீர் இறைக்கவேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கம்ம சமூக முன்னேற்றத்திற்காகப் பெண்கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

சர்க்காரால் இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் சில சீர்திருத்தக் கடனை விவசாயிகள் எளிதில் பெறும்பொருட்டு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்கும்படி இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது,

சர்க்கார் மிருக சிகிச்சை சாலையில் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆங்கிலோ இந்தியர், மகமதியர் இவர்களுக்கு மட்டும் காட்டும் சலுகையை விவசாயிகளாகிய நமக்கும் கொடுக்க வேண்டுமாய் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

ஜில்லா போர்டாருக்கு தொழில் வரி விதிக்கும் அதிகாரம் இருப்பதில் தொழில் வரியை விரும்பாத தாலுகா போர்டு எல்லைக்கு அவ்வரியை விதிக்கக் கூடாது என்று திருத்தவேண்டுமாய் இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

நமது சென்னை கவர்ன்மெண்டுக்கு ஐ. சி. எஸ். உத்தியோகத்தில் கல்வியில் தாழ்ந்த வகுப்பினருக்கு 4-ஸ்தானங்கள் நாமிநேஷன் செய்ய அதிகாரமிருப்பதால் அந் நால்வரில் கம்மவாரில் ஒருவரை நாமிநேஷன்செய்யவேணுமாய் இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மது வருந்துவது பஞ்சமா பாதகங்களுக்குள் ஒன்றாயிருப்பதாலும் சமூகப் பிற்போக்கிற்கும் ஏழ்மைக்கும் அறியாத் தன்மைக்கும்முதன்மையாயிருப்பதால்கம்மவார் ஒருவரும் மதுவை அருந்தக்கூடாதென்றும் கடைகளை ஏலத்தில் எடுக்கக்கூடாதென்றும், கடைகளில் விற்கக்கூடாதென்றும் மரங்களை கள்ளுக்கு விடக்கூடாதென்றும், இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

கோயமுத்தூர் ஜில்லா கம்மவார் சங்கமென்று ஒரு சங்கம் ஸ்தாபனம் செய்து ரிஜிஸ்டர் செய்யவேண்டுமாயும் அதற்குத் தகுந்த பணவசூல் செய்யவேண்டுமாயும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டு சட்டசபை விஷயமாய் தீர்மானம் கொண்டுவரப்பட்டு விசேஷ விவாதம் நடந்தது. இந்த விஷயம் அநேகமாய் எல்லாடெலிகேட்டுகளின் கவனத்தையும் கவர்ந்தது. பலர் கவுன்சிலுக்கு கம்மவாரில் ஒருவரை நிறுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். சிலர் கம்மவார்களில் ஒருவரை இந்த வருஷ எலக்ஷனுக்கு நிறுத்துவதை ஆதரிக்க வில்லையாகிலும் முடிவில் கம்மவார் ஒருவர் எலக்ஷனுக்கு நிற்கும் பக்ஷத்தில் சகல கம்மவார்ப்பிரதிநிதிக்கே ஓட்டுசெய்ய வேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

---

## திரு. நாயக்கரவர்களும் நாடாரும்.

திரு. பெ. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தமிழ்ப் பத்திரிகைகள் சிலவற்றில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் நாடார் வகுப்பினர்களின் அன்பிற்கு முரண்பட்டிருப்பதாக எழுதியிருந்த கட்டுரையினைக் கண்டித்து பல நாடார் நண்பர்கள் கத்தை கத்தையாக மறுப்புரை எழுதியிருக்கின்றனர். நம் “குடி அரசு” வாரப் பத்திரிகை யாதலால் இடமின்மையாலும், அம்மறுப்புரை களைப்பிரசுரிக்க விருப்பமின்மையாலும் பிரசுரிக்காது போயினமைக்கு நிருபநண்பர்கள் பொறுத்தருளுவார்களாக.

மணவை, ரெ. திருமலைசாமி,
துணை ஆசிரியன்.

## திரு. டி. எ. இராமலிங்கம் செட்டியார்

### சுயராஜ்யக் கட்சியிலிருந்து விலகுகிறார்.

திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்கும் தேசிய பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்த திரு. டி. எ. இராமலிங்கம் செட்டியார் வகையராவுக்கும், சட்டசபையை விட்டு வெளியேறுவதற்குமுன், உத்தியோகம் ஏற்கும் சம்பந்தமாய் நடந்த உடன் படிக்கையின் பிரகாரம் திரு. ஐயங்கார் நடந்து கொள்வாரென நம்பமுடியாமலிருப்பதால் திரு. இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியிலிருந்து விலகி பார்ப்பனரல்லாதார் கட்சியின் சார்பாக சட்டசபைக்கு நிற்கப் போவதாய், கோவை கனவான் திரு. வெரிவாடஞ் செட்டியாரவர்களை நமது பிரதிநிதி கண்டு பேசியதிலிருந்து தெரிய வருகிறது.

# கோபியில் மா பெருங்கூட்டம்.

## சுயராஜ்யம் யாருக்கு வேண்டும்.

கல்லைக் கடவுளாக்கும் மந்திரம் தாழ்ந்தோரை உயர்ந்தோராக்காதோ?

தாழ்ந்தோர் கோயிலுள் நுழைந்தால் ஓட்டமெடுக்கும் சுவாமிக்கு நம்மைக் காப்பாற்றும் சக்தியுண்டா?

## ஜெயிலிலும் ஜாதி வேற்றுமை.

திரு. என். தண்டபாணி பிள்ளையின் சொற்பெருக்கு.

திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் விளக்கவுரை.

(நமது நிருபர் எழுதுகிறார்.)

கோபிசெட்டிபாளையம் வேளாள ஹாஸ்டல் கட்டிடத்தில் 13-6-26ல் ஓர் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீமான்கள் புதுப்பாளையம் குப்பண்டாக் கவுண்டர், நஞ்சப்புளியம்பட்டி கே. கிஞ்சப்ப கவுண்டர், கோபி எஸ். பி. கிருஷ்ணய்யர் ஆகிய கனவான்களின் அழைப்புக்கிணங்கி அநேககிராம வாசிகளும் உள்ளூர்வாசிகளும் ஏராளமாக மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தனர். மகா நாட்டிற்காக ஈரோட்டிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ. வெ. இராமசாமி நாயக்கர், எஸ். இராமசாமி நாயக்கர், எஸ். இராமநாதம் பிள்ளை, என். தண்டபாணி பிள்ளை, எம். எஸ். சுப்பண செட்டியார் முதலிய கனவான்கள் மோட்டாரில் மாலை 3-மணிக்கு வந்து சேர்ந்தனர். கட்டிடத்திற்கு அடியிற்கண்ட முக்கியஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான்கள் நல்லகவுண்டம்பாளையம் கரிச்சி கவுண்டர், எஸ். பி. கிருஷ்ணய்யர், கோபி தாலூகா போர்டு பிரசிடெண்டு கே. என். நஞ்சப்ப கவுண்டர், ஐயம்பாளையம் ராஜாக் கவுண்டர், கே. கிஞ்சப்ப கவுண்டர், கே. கருத்திருமண கவுண்டர், புளியம்பட்டி மாஸ்தி கவுண்டர், கொங்கர்பாளையம் கந்தப்ப கவுண்டர், வெங்கிடாசலக் கவுண்டர் ஸ்ரீலஸ்ரீ கைவல்ய சுவாமிகள், சுப்பு ஆசாரியார், சுப்பு பண்டாரம், திருப்பூர் முருகநாத செட்டியார் முதலிய கனவான்களும் உள்ளூர் ஜனங்களும் மாணவர்களும் ஏராளமாக வந்திருந்தனர். கூட்டம் 5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. கூட்டத்திற்கு கொங்கர்பாளையம். ஸ்ரீமான் கந்தப்பகவுண்டரவர்கள் அவைத்தலைமை வகித்தார். ஆரம்பத்தில் ஸ்ரீமான் எஸ். பி. கிருஷ்ணய்யரவர்கள் சிறிது நேரம் பேசினார். (இவரது பிரசங்கச்சுருக்கத்தை சென்ற வாரம் "கோபியில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் நாடகக்கம்பெனி" என்ற தலைப்பின் கீழ் எழுதியிருக்கிறேன்.) பிறகு ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களும் ஸ்ரீமான் நாயக்கரவர்களும் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கமாவது:—

### ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களின் சொற் பெருக்கு.

சபாநாயகரவர்களே!

நான் பேசுவதற்கு முன் இரண்டொரு விஷயம் முதலில் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது இது போன்ற கூட்டங்களில் என்போன்றவர்கள் வந்து பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறதென்பதை முதலில் சொல்ல விரும்புகிறேன். நான் 15 வருஷ காலமாக காங்கிரஸ் இயக்கத்திற்காக உழைத்து வருகிறேனும் தவிர தேசத்திற்காக ஜெயிலுக்கும் போயிருக்கிறேன். ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர், எஸ். இராமநாதன் எல்லோரும் ஜெயிலுக்குப் போயிருக்கிறோம். இன்னும், நாங்கள் தேசத்திற்கென்றே பாடுபட்டு வருகின்றோம்.

### எங்கள் நோக்கம்.

நாங்கள் காங்கிரசை தொலைத்துவிடவேண்டுமென்கிற எண்ணமுடையவர்களல்ல. காங்கிரசை உடைக்காமலும் ஒரு வகுப்பார் சுயநலத்திற்கே போகாமலும் பார்த்துக்கொண்டு வருதான்; எங்கள் கட்சியாரும். ஆகையால் பட்டத்தையும் பதவியையும் தாங்கித் திரிபவர்கள் சொல்லுவதைத்தான் வேதவாக்கென்று எவரும் நினைக்கக் கூடாது. என் போன்றவர்கள் வார்த்தையையும் நீங்கள் கேட்டுத்தானாகவேண்டும். சிறியவர்களென்று நீங்கள் என்பேச்சைத் தள்ளிவிட முடியாது. ஆதலால் படித்தவர்கள் பேச்சைத்தான் கேட்கவேண்டுமென்பது கருத்தல்ல. நாங்கள் கஷ்டமறிந்தவர்கள்; அவர்கள் சுகமறிந்தவர்கள். இனி காங்கிரசின் தற்கால நிலையென்பதைக் குறித்து சிறிது பேசுகிறேன்.

### தேவஸ்தான சட்டம்

தேவஸ்தான மசோதா வந்ததினால் மாத்திரம் சர்க்கார் மதவிஷயத்தில் தலையிடவில்லை. மடங்களிலும் கோயில்களிலும் சோம்பேரிகளால் விழுக்கும் பொருளை ஏன் நல்ல கல்வி விஷயமான தர்மத்தில் செலவிடக்கூடாது? ஜஸ்டிஸ் கட்சியாரிடமிருந்து அந்தச்சட்டம் வந்து விட்டதினாலேயே எப்படி அந்தச் சட்டம் கெட்டதாகிவிடும்? எக்கட்சியிலிருந்து அச்சட்டம் உண்டானாலென்ன? அது நன்மையா, தீமையா, என்பதையல்லவோ கவனித்தல்வேண்டும். அந்த சட்டத்தினால் நன்மையுண்டாகுமென்ற நம்பிக்கையினாலேயே ஸ்ரீமான்கள் நாயக்கர், வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் அதை ஆதரித்துவருகின்றனர்.

### சகலருக்கும் சமத்துவம்.

பிராமணனுக்கு இருக்கும் சுதந்திரம் மற்ற ஜாதிக்கு வேண்டாமா? உதாரணமாக தஞ்சாவூர் முதலிய ரெயில்வே பிளாட்பாரங்களைக் கவனித்துப்பாருங்கள். ரெயில்வே கிளப்பில் உள்ளதே சொற்ப இடம். அதில் பாதிக்கு மேல் "பிராமணனுக்கு" என ஒதுக்கி வைத்து விட்டனர். மற்ற "சூத்திரர்" என்று சொல்லப்பட்ட மகமதியர் கிறிஸ்தவர் சைவர் பிள்ளை முதலியார் எல்லோருக்கும் குறைவான இடந்தானிருக்கிறது. அதிலும் சாணிச்சட்டி, விளக்குமார், எச்சிலைத் தொட்டி, ஒதுக்கல் முதலியது எல்லாமிருக்கின்றன. என்னே, அநியாயம்! பிராமண ஜாதி ஒன்றுக்குமட்டும் முக்காற் பாக இடம், இத்தனை ஜாதிக்கும் கால் பாக இடமென்றால் எப்படி நியாயமாகும்? நான் அதற்காக இதைக் குறிப்பிடுகிறேனென்றால் காப்பிக் கிளப்பில்கூட அவர்களுக்கிருக்கிற சுதந்திரம் நமக்கில்லையானால் நாளைக்கு பெரிய சுயராஜ்யம் வந்துவிட்டால் எப்படி சமத்துவமாக இருக்க முடியும்? எந்த கவர்ன்மெண்டு வந்தாலும் நமக்கு ஒன்றுமில்லை. உலகத்திலுள்ள எல்லா மனிதனுக்கும் சுதந்திரம், சமத்துவம் வேண்டும்.

### காந்தி காங்கிரஸ் வேண்டும்.

ஒத்துழையாமைத் திட்டம் அமலுக்கு வந்த போது சுயராஜ்யம் பக்கத்தில் தெரிந்தது. திடீரென்று ஏற்பட்ட பர்டோலி சம்பவத்தால் தெரிந்த சுயராஜ்யம் மறைந்திட்டது. ஆகையால் மீண்டும் காந்தியடிகள் திட்டம் அமலுக்கு வந்தால் சுயராஜ்யம் பெறலாம். 35 வருஷங்களுக்கு முன்னிருந்த காங்கிரஸ் போய் மகாத்மா காங்கிரஸ் மீண்டும் உண்டாகவேண்டுமென்பதுதான் முக்கியமான எங்கள் நோக்கம்.

### வகுப்புவாரி பிரதி நிதித்துவம்.

தற்கால காங்கிரசைத் திருத்தவேண்டும். நம் நாட்டிலுள்ள 100-க்கு 97 பேருள்ள பிராமணரல்லாதாரிடம்தான் காங்கிரஸ் இருக்கவேண்டும். 100-க்கு 97 பேரிருந்து கொண்டு 100-க்கு 3 பேர்களுள்ள ஒரு கூட்டத்தாரிடம் காங்கிரசை விட்டு விட முடியாது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இப்பொழுது ஏற்பட்டதல்ல. சுமார் 8 வருஷத்தின்போதே ஏற்பட்டதுதான். சென்னை மாகாணச் சங்கம் ஏற்பட்டதே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நிலை நாட்டவேதான். வகுப்புவாரி உரிமையில்லாவிட்டால் நம் நாட்டில் வித்தியாசம் ஒழிய வழியில்லை. இவைகளைப்பற்றிப் பேசினால் பிராமணத்துவேஷி என்று சொல்லுகின்றனர்.

### உத்தியோக வேட்டை.

தங்கள் தங்கள் உரிமையை நாடிப்பேசினால் உடனே அவனை ஜஸ்டிஸ் கட்சியென்று சொல்லிவிடுகின்றனர். ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி "சுதேச மித்திரன்" முதலிய பத்திரிகைகள் தூற்றிவருகின்றன. அவ்வாறு தூற்றுவதற்கு ஏதாவது ஆதாரமுண்டா என்பதுதான் நமது கேள்வி. ஜஸ்டிஸ் கட்சியார் உத்தியோக வேட்டையாடுகின்றனர் என்று சொல்லுகிறார்கள். உத்தியோகவேட்டையில்லாத கட்சி எது? சுயராஜ்யக்கட்சி உத்தியோக வேட்டையாடவில்லையா? ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் மகன் உத்தியோகத்தி லில்லையா? சி. பி. ராமசாமி அய்யர் வகித்திருப்பது காங்கிரஸ் மூலமடைந்த உத்தியோகமல்லவா?

### சாக்கடையா? கக்கூசா?

ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியாருக்கு நகர சபைக்கு நாமிநேஷன் செய்ததைப்பற்றி "சுதேச மித்திரன்" கொல்லை

வழியாக செட்டியார் நுழைந்தார் என்று எழுதிற்று. செட்டியார் நுழைந்தது கொல்லைவழி யென்றால், அந்த பனகால் ராஜா விடம் நாமிநேஷன் பெற்று கோயமுத்தூர் ஜில்லா போர்டில் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் நுழைந்தது சாக்கடை வழியா? கக்கூஸ் வழியா? எனக்கேட்கிறேன். என் பிராமணர் போனதைப்பற்றி "சுதேசமித்திரன்" எழுதவில்லை?

### இவர்களுக்கே பட்டயமா?

தென்னிந்தியாவில் ஒருவித சூழ்ச்சி இப்போது நடந்து வருகின்றது. அதாவது, காங்கரஸ், மகாத்மாவின், ஒத்துழையாமைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு திட்டங்கள் அமுலுக்கு வரும்போது, மகாத்மாவைக் குறை கூறிக்கொண்டிருந்தவர்களும், சட்டசபையை விட்டு வெளியில் வந்து விடும்படி கேட்டபோது வெளியில் வராதவர்களும் ஆகிய ஸ்ரீமான்கள் டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், சி. வி வெங்கட்டரமணய்யங்கார், வெள்ளியங்கிரி கவுண்டர் முதலியவர்கள் இப்போது தாங்கள் காங்கரஸ் காரர்களென்று சொல்லிக்கொண்டு மகாத்மாவின் பெயரால் ஓட்டுக்கேட்க ஆரம்பித்திருக்கின்றனர். இப்போது 'மகாத்மா சொன்னார்' என்று ஓட்டுக் கேட்கும் இவர்கள், மகாத்மா சொன்னபோது ஏன் சட்டசபையை விடவில்லை? எதற்காகப் போனார்கள்? இந்த 6 வருஷமாய் இவர்கள் செய்த வேலையென்ன? சட்டசபைக்கு யார் போனாலென்ன? இவர்களுக்கு மாத்திரம் என்ன, பட்டையமா? சட்டசபையில் ஒருவித அனுகூலமென்பதேயில்லை யென்று நான் ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு இவர்கள் விரும்பவில்லை. இவர்கள் விரும்பினால் கிடைக்காதா? இவர்களுக்குயோக்கியதையில்லையா? தற்காலம் ஓட்டுக் கேட்டு ஓட்டர்களை ஏமாற்றப்பார்க்கும் நபர்கள், பொய்யை,பேச்சு வல்லபத்தால், மெய்யாக்கிக் காட்டி வருகின்றனர். நீங்கள் ஏமாந்து விடாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்யவே இங்கு வந்திருக்கிறோம்.

### தியாகிகள் யார்?

படித்த கூட்டத்தார் எவரையும் கட்டுப்பாடுகளிருந்து ஏமாற்றுவார்கள். பேசும்போதும் சாமர்த்தியமாகப் பேசுவார்கள். நாம் தான் யாரையும் நம்பி மோசம் போகிறோம். ஒத்துழையாமைத் திட்டத்தின் போது நாம் எத்தனை பேர்கள் நம்பிக்கையுடனிருந்தோம்! தியாகம் செய்தோம்! பிராமணர்கள் யார் உத்தியோகத்தை விட்டார்கள்?

### ஜெயிலிலும் ஜாதி வேற்றுமை.

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் தியாகமென்ன? அவர் தேசசேவை யென்ன? அவருக்கு தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு எலெக்ஷன் நடந்த காலத்தில் உபயோகமில்லாத ஒரு பிராமணனை நிறுத்தி பிராமணரெல்லோரும் அவனுக்கே ஓட்டுப்போட்டார்கள். நாங்கள் இதை நேரில் பார்த்து சகித்தோம். இன்னும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். கடலூர் ஜெயிலில் நானிருக்கும் போது பிராமணர்களுமிருந்தனர் உயர்ந்த ஜாதியென்று பிராமணருக்கு மட்டிலும் வெகுசமயல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் போக மற்றெல்லா ஜாதியாரையும் ஒரே விதமாகத்தான் பாவிக்கப்பட்டது. பிராமணன் வீட்டில் சாப்பிடாத பூர்ண சைவர்களானாலும் "சூத்திரர்க"ளோடுதான் அவர்களும் சேரவேண்டும்.

### பிராமணர்களின் பிறவிக் குணம்.

இதுவும் தவிர, சேலம் ஜெயிலில் ஸ்ரீமான் டாக்டர் நாயுடு அவர்களிருக்கும்போது ஒரு தமிழர் சூப்ரெண்டாயிருந்தார். அவர் நாயுடுவுக்கு அனுகூலமாயிருப்பதாக பிராமணர்கள் வேணுமென்றே கட்டிவிட்டு, சூப்ரெண்டைத் துலைக்க வழி தேடிவிட்டனர். இன்னும் நான் இப்படி அநேக சந்தர்ப்பங்களைச் சொல்ல முடியும். ரயில்வே காப்பிக்கிளப்பு, புத்தகளம், ஜெயில், சுடுகாடு, சுவர்க்கம் வரையும் பிராமணர் என்பவர்களுக்கு தனி உரிமை கேட்கும் போது நாம் ஏன் நமது உரிமையைக் கேட்கக்கூடாது? நமது உரிமையைக்கேட்டால் அது பிராமணத்துவேஷமென்று சொல்லுகிறார்கள்.

### ஏழைகள் முன்னேற ஏற்ற வழி.

பிராமணர்கள் தங்கள் நன்மையை நாடும்போது நாமேன் பிராமணரல்லாதார் நன்மையை நாடக்கூடாது? நமது சமூகமும் சமத்துவத்தை அடைய வழி தேடவேண்டும். சட்டம் செய்யும் சபையானாலும் சரி, காங்கிரஸ் ஸ்தானமானாலும் சரி, நமதுபங்குவீதப்படிக்கு சமத்துவத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் தேசத்தில் ஜாதிச்சண்டைகள் ஒழியும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிடைத்தாலொழிய எளியவர்கள் கஷ்டம் நீங்க வழியில்லை. பிராமணர்கள் ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் சூழ்ச்சி செய்து தங்கள் உரிமையை ஸ்தாபித்துக்கொள்ள முயலும் போது நாம் நமது உரிமைக்குப் பாடுபடுவதுமட்டும் எப்படிக்குற்றமாகும். ஒருவன் கஷ்டப்பட்ட பலனை இன்னொருவன் அனுபவிக்க எப்படிப் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? தேசத்தில் நன்மையையும், தீமையையும் எல்லோரும் சமமாக ஏற்று அனுபவிக்கவேண்டும். நமது உண்மையை அடைய என்ன கஷ்டங்கள் வந்தாலும்சகித்துக்கொண்டு பாடுபடத்தான் வேண்டும். ஆகையால்தான் நாங்கள் தைரியமாய்ச் சொல்லிவருகிறோம். நாங்கள் எவரையும் தூஷிக்கும் முட்டாள்களல்ல. அதற்காக வரவில்லை யென்பதையும் தெரிவித்துக் கொண்டு இத்துடன் எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

## ஸ்ரீ நாயக்கரவர்கள் பிரசங்கம்.

---

சகோதரர்களே!

சில தினங்களுக்கு முன் இந்த இடத்தில் நடந்த மகாநாட்டில் பலர் என்னை வாயில் வந்தபடி திட்டியதாகக் கேள்விப்பட்டேன். அதைச் சகிக்காத சில பிராமணரல்லாதார் என்னை இங்கு வந்து உண்மை விஷயங்களைப்பற்றி பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டதால் இன்று நாங்கள் வந்திருக்கிறோம். முன்னால் வந்தவர்கள் நடந்து கொண்டது போல் நாங்கள் இங்கு யாரையும் திட்டுவதற்கு வரவில்லை; அந்த எண்ணமுமில்லை ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளையவர்கள் தமது பிரசங்கத்தில் நமது நாட்டிற்கு பிராமணர்களால் ஏற்பட்டிருக்கும் கொடுமையைக் குறிப்பிட்டார். அவர் எடுத்துக்காட்டிய வித்தியாசங்களைத் திருத்தவேண்டுமென்கிறது, ஆலேயேபிராமணர்களால் நமது சமூகத்திற்கு நேர்ந்த ஆபத்துகளைச் சொன்னார். மற்றவர்களெல்லாம் தன்னை நல்லவன் என்று சொல்ல வேண்டுமென்கிற சுயநலத்தோடு அவர் பேசவில்லை. எடுத்துக்காட்டிய குற்றங்கள்நீங்கவும் வகுப்புப்பிணக்குகள் ஒழியவுமே அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

### வகுப்புப் பிணக்கு.

தற்காலத்தில் வகுப்புப்பிணக்குகள் இல்லையென்று மறைத்து வைத்துப் போவதில் பலனில்லை. நம் தேகத்தில் ஒரு புண் உண்டானால் அதை மறைத்துக் கட்டி வைத்துக்கொண்டிருந்தால் அது தேகம் பூராவையும் கெடுத்துவிடும். அதை அறுத்து ஆற்றிவிட்டால் அதுஉடனே ஆறிவரும். அதுபோல் குற்றங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டி மாற்றித்தானாகவேண்டும். வடநாட்டில் இந்து முஸ்லீம் வகுப்புச் சண்டைகள் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. கல்கத்தாவில் இந்து முஸ்லீம் கலவரமுண்டிருக்கிறது; பம்பாயிலும் புகைந்து கொண்டிருக்கிறது; சீக்கிரம் நம் மாகாணத்திற்கும் வந்து விடுமோவென சந்தேகமாயிருக்கிறது. வீரர்களான மகமதலி முதலிய பெரிய தேசபக்தர்கள் கூட இப்பொழுதிருக்கும் நிலைமையைப் பார்த்து தேசத்தை விட இஸ்லாம் பெரியது என்று சொல்லிவிட்டனர். 7 கோடி முஸ்லீம்கள் 24 கோடி இந்துக்களிடம் அடிமையாக முடியாதென்று அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். காரணமென்ன? அவர்கள் வீரர்களல்லவா? கிச்சிலு பெரிய தேசபக்தர்,பஞ்சாபில் அவரை கவர்மெண்டார் ரகசியமாய்க் கொண்டு போனதினால் தான் அவ்வளவு ஜனங்கள் உயிரையும் விட்டனர். ஒத்துழையாமையே அவரால் தான் அங்கு உண்டானதென்று சொல்லலாம். அத்தகையவரும் தங்கள் வகுப்பு நலனேபிரதானமென்று சொல்லுகிறார். நாளுக்கு நாள் காங்கரஸை விட்டு எல்லா மகமதிய நண்பர்களும் விலகி நிற்கின்றனர்.

### வகுப்பை மறந்தவர் எவருளர்?

இப்போது தமிழ் நாட்டிலும் காங்கரஸ் கமிட்டியில் வகுப்பை மறந்த ஏதாவதொரு மதிப்புள்ள பிராமணரல்லாதார் இருக்கிறார்களா என்று பாருங்கள். ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரிருப்பதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். அவரும்வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாமென்றுசொல்லவில்லை; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்கிறார் ஸ்ரீமான் டி. ஏ. இராமலிங்கம் செட்டியாரிருக்கிறார் என்று சொல்லுவீர்கள். அவரையும் நேரில் போய்க்கேட்டோம். அவர் "நான் வெகு காலத்திற்கு முன்னேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று அதற்குரிய இயக்கத்தையும் ஆரம்பித்திருக்கிறேன்; நீங்களெல்லாம் இப்போது வந்தவர்கள்," என்று எங்களிடம் சொன்னார். ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களும் காங்கரசிலிருந்து விலக ஆரம்பமாய் விட்டது. ஸ்ரீமான் டாக்டர் நாயுடு அவர்களும் முதலியாரவர்களின் அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்வதாக 'தமிழ்நாடு' தலையங்கம் எழுதிவிட்டது. ஸ்ரீமான் முதலியார்

(இதன் தொடர்ச்சியை 9-ம் பக்கம் பார்க்க.)

## கோபிதாலூகா அரசியல் மகா நாட்டில் நடந்த சம்பவம்.

(ஸ்ரீலஸ்ரீ கைவல்விய சுவாமிகள் எழுதியது)

4-6-26-ல் கோபியில் சீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையின்கீழ் நடந்தேறிய சபையின் நடவடிக்கைகளைப் பற்றிச் சரியாகவும் சத்தியமாகவும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். ஏதாவது ஒரு கட்சியின் சார்பாகவோ அன்றித் தூண்டப்பெற்றோ இதை யான் எழுதியதாகக் கருதாமலிருக்க என்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் 26 வருடம் கோயமுத்தூர் ஜில்லாவில் சன்னியாசி என்ற பெயரோடு வேளாள சமூகத்தினிடையே அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் சொல்லி அவர்களிடையே இருந்து தொண்டு செய்துவருவதால் கோயமுத்தூர் வாசிகளில் அநேகருக்கு என்னைத் தெரியும். ஆதலால் இதிலுள்ள நன்மை தீமைகளைப் பற்றி ஆலோசிப்பார்களென்று எண்ணுகிறேன்.

சபையில் மதுவிலக்கு, கதர், தீண்டாமை இவைகளைப் பேசி சீமான்கள் வெள்ளியங்கிரி கவுண்டர், டி. எ. இராமலிங்கஞ் செட்டியார், சி. வி. வெங்கிட்டரமண ஐயங்கார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் இவர்கள் சட்ட சபைக்கு சுயராஜ்யக் கக்ஷியால் தெரிந்தெடுத்திருப்பதாகவும், இவர்களே சரியானவர்களென்றும், இவர்களுக்கே ஓட் கொடுக்கவேண்டும் என்பவைதான் பிரசங்கத்தின் முடிவு. "இவர்கள் படித்தவர்கள்தான்; பெரியபணக்காரர்களும் ஆவார்கள்; ஓட்டர்களும் இவர்களைச் சார்ந்தவர்களே; 6-வருட அனுபோகஸ்தர்கள் தான்;"—என்னும் விடயங்கள் இருக்கட்டும். இவர்கள் சொல்லிக்கொள்ளும் கட்சிப் பிரகாரம் இவர்கள் 'லாயக்' உள்ளவர்களா? என்பதைக் கீழ்கண்ட நியாயத்தால் கவனிப்போம்.

மது விலக்கைப்பற்றிப் பேசினவர்களில் சீமான் வெங்கிட்ரமண ஐயங்காரும், (ஐயம்பாளையம்) சீமான் இராஜாக் கவுண்டரும் முக்கியமானவர்கள். மதுவிலக்கைப் பற்றிப் பேச வந்த சீமான் கவுண்டரவர்கள் அதை விட்டுவிட்டு தாலூகா போர்டு நாமிநேஷனைப் பற்றிப் பேசி வெள்ளியங்கிரிக் கவுண்டருக்குத் திருப்தியை உண்டு பண்ணினார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த நாமிநேஷன் மெம்பர் சீமான் சுப்பிரமணிய கவுண்டர் நாமிநேஷன் கதை முழுவதையும் சொல்லியபின் சீமான் ராஜா கவண்டரவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

சீமான் வெங்கிட்ரமண ஐயங்கார் அவர்கள் மந்திரிக் கட்சியையும், சீமான் இராமசாமி நாயக்கரவர்களையும் எவ்வளவு தூரம் குற்றம் சொல்லவேண்டுமோ, அவ்வளவு தூரம் சொன்னார். ஸ்ரீமான் ஐயங்கார் தமது தோப்பில் கள்ளுக்கு முட்டி கட்டப்படுகிறதா இல்லையா என்று சீமான் இராமசாமி நாயக்கருக்கும், சீமான் ஐயங்கார் அவர்களுக்கும் வாக்கு வாதம் நடந்து வருவது வாசகர்களுக்கு அநேகமாய்த் தெரிந்திருக்கலாம். சபையில் ஸ்ரீமான் கருப்பண்ண செட்டியார், "ஐயங்கார் தோப்பில் முட்டி கட்டித் தொங்குவது வாஸ்தவம். ஐயங்கார் தெளுவென்கிறார். நாயக்கர் கள் என்கிறார். அவிழ்த்துப் பார்த்தால் கள்ளா? அன்றித் தெளுவா? என்பது விளங்கும். சீமான் ஐயங்காரவர்கள் முட்டியே கட்டாமல் விட்டுவிட்டால் இந்தச் சந்தேகம் இல்லாமல் போய்விடும்" என்றார். "போன வருடம் நஞ்சைப் புளியம்பட்டியில் சீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையின் கீழ் கூடிய ராஜீய மகாநாட்டில், எனது மரத்தில் கள் முட்டி கட்டுவதாய் இருந்தால் 100 ரூபாய் குத்தகைக்கும், கட்டாவிட்டால் 95 ரூபாய் குத்தகைக்கும் எனது தோப்பை விடுகிறேன் என்று சீமான் ஷண்முகஞ் செட்டியார் முன்னிலையிலேயும், என் முன்னிலையிலேயும், இன்னும் அநேகர் முன்பாகவும் சொன்னீர்களே" யென்று யான் கேட்டேன். அதற்குப் பதில் ஏதோ சொல்ல வந்தார். "நீங்கள் பதில் சொல்வதில் பிரயோஜனமில்லை; ஸ்ரீமான் ஷண்முகஞ் செட்டியார், உண்டு இல்லை யென்று சொல்லிவிட்டால் விவகாரம் ஒழியும்" என்றேன்.

செட்டியார் சிரித்துக்கொண்டு சும்மா இருந்து விட்டார். ஜூன் மாதம் 7-ந் தேதியன்று வெளியான "சுதேசமித்திர"னில் ஸ்ரீமான் ஐயங்கார் "எனது தோப்பில் தெளுவுகூட இறக்கவில்லை" யென்கிறார். கோபி மகாநாட்டில், தெளுவுக்கு முட்டி கட்டியிருப்பதை ஒத்துப் பேசினார். நஞ்சைப் புளியம்பட்டி கூட்டத்தில் தனது மரத்தில் கள்ளுக்கு கட்டாவிட்டால் 100-க்கு 5 ரூபாய் குறைத்து விடுவதாய்ச் சொல்லியும் குத்தகைதாரன் கட்டுகிறான் என்று சொன்னார். சபையின் முன்னாலிருந்து கேட்ட விடயமிது! ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் இனிமேல் கள்ளுக்கும் மரம் விடுகிறதில்லை என்று சொல்வது நல்ல மார்க்கம். எதை எழுதினாலும் பத்திரிகையில் எழுதிவிடுகிறார்கள். உண்மையை உள்ளூரார் தெரிந்து கொள்ளட்டும். பெரிய வக்கீல்களின் உதவியால் சாக்ஷிகளைத் தடுமாறச் செய்து சந்தேகத்தில் கொண்டுவந்து, சந்தேகத்தைப் பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டுமென்றும், கிரிமினல் சட்டத்தாலும் கொலை செய்யாதவன் அகப்பட்டுக் கொள்ளுவதைவிட கொலைசெய்தவன் தப்பித்துக் கொள்வதுமேல் என்னும் "நீதியா"லும் கொலை செய்தவர்கள் எவ்வளவு பேர் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டு பெரியவர்கள் தப்பில்லாமல் நடக்கவேண்டும்; தப்பை ஒத்துக்கொள்ள வேண்டும். செல்வாக்காலும், வாய் சாமர்த்தியத்தாலும், பத்திரிகைகளினது சலுகையினாலும் குற்றத்தை மறைத்துவிடலாமென்று நினைப்பதைவிட, ஜனங்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள், என்ன நினைக்கிறார்கள், என்றுயோசிப்பது மேல். கள்ளை ஒழிக்கவே சட்டசபைக்குப் போகிறோம் என்கிறார்கள். சுயராஜ்யக் கட்சியார் கள்ளை உற்பத்தி செய்வதும், அதற்கு உடந்தையாக இருப்பதும் காங்கிரஸுக்கு நேர் விரோதம். சுய ராஜ்யக் கட்சியினால் நிறுத்தப்பட்ட மற்ற மெம்பர்களும் ஏராளமான தோப்புடையவர்கள். கள்ளுக்கு மரம் விட்டிருக்கிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. சீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் 'டஸர் ஸில்க்' கோட்டும், மஸ்லின் ஜரிகை உருமாலையும் தரித்துக்கொண்டு வந்தார். இது இவர்களது காங்கிரஸ் கொள்கையா? தீண்டாமையைப் பற்றி ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் பேசினார். இவருடைய கிராமத்தில் பஞ்சமர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்? பூனாச்சிமலைக்கும் நீலகிரி மலைக்கும் கூலி வேலைக்குப் போகிற வழியில் அவர்கள் படும் கஷ்டத்திற்கு இவர் தனி வார்டு கட்டி வைக்காவிட்டாலும், போர்டு ஆஸ்பத்திரியிலும், கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியிலும் இவர் செல்வாக்கை உபயோகப்படுத்தி அவர்கள் விஷயத்தில் சரியாய் நடக்க கண்டிப்பான எச்சரிக்கை செய்தால் பஞ்சமர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்தவராவார்.

சட்ட சபைக்கு நிற்கும் மூவரும் மற்ற மெம்பர்களும் நம் ஜில்லாவில் உள்ள பணக்காரர்களில் முக்கியமானவர்கள். அவனாசி தாலூகாவில் ஒரு பகுதியும், பல்லடத்தில் முக்கால் பாகமும், காங்கேயம் முழுமையும் பஞ்சத்தால், குடிக்க ஒரு வேளைக் கஞ்சிக்குமின்றி கஷ்டப்பட்டு, தாகத்திற்குத் தண்ணீர் இல்லாமல், மாடு கட்ட நிழலுக்கிருந்த மரத்தையும் வெட்டி கோயமுத்தூர் வீதியெல்லாம் விறகாய் விற்கிறார்களே; இந்தப் பிரபுக்கள் மூன்று பேரும் என்ன செய்தார்கள்? ஒரு வேளைத் தண்ணீருக்கு ஒரு கிணறு வெட்டினார்களா? ஒரு வேளைக் கஞ்சிக்கு ஒருபடி ராகி கொடுத்தார்களா? சொற்ப வட்டிக்கேனும் பணம் கொடுத்து ஆதரித்தார்களா? கிடக்க, இவர்கள் பெயரால் ஸ்காலர்ஷிப் பெற்று எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள்? தேகாப்பியாசத்தின் விளையாட்டு விர்த்திக்கோ, எந்தப் பாடத்திலாவது முதலில் தேறுகிற பையன்களுக்குப் பரிசோ வைத்திருக்கிறார்களா? இவர்கள் பெயரால் எந்த ஆஸ்பத்திரி நடைபெறுகிறது? எந்த ஆஸ்பத்திரியில் ஏழைகளுக்கு எத்தனை படுக்கைகள் வைத்திருக்கிறார்கள்?


கோயமுத்தூர் ஜில்லாவில் நதிகளின் பிரவாகங்களால் உண்டான நஷ்டத்திற்கு என்ன ஈடு கொடுத்தார்கள்? இவர்கள் பணம் ஏழைகளின் என்னென்ன நன்மைகளுக்கு உபயோகப்பட்டிருக்கிறது? சட்ட சபைக்குப் போவதாலும், சட்ட சபையாலும் யாதொரு நன்மையும் உண்டாவதில்லை என்று அநேக மேதாவிகள் சொல்லியுள்ளார்கள். "இல்லை, இல்லை; நாங்கள் அநேக கட்டுப்பாட்டுடன் போய் அநேக காரியங்களுக்கு முட்டுக் கட்டை போட்டு முடித்து விடுகிறோம்" என்கிறார்களே! எதை முடித்தார்கள்? முன்கை நீண்டாலன்றோ முழங்கை நீளும் என்பது நம் தேசத்துப் பழமொழியன்றோ? "நீங்கள் பேசுவதுபோல் செய்கையில்லாததால் உங்கள் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்க மாட்டோம்" என்று இந்திய சபை முதல் மெம்பர் சொன்னாரே. நான் அதைப் பத்திரிகையில் படித்துக் கொஞ்ச நாட்கள்தான் ஆயின. வார்த்தைகளைப் போல் செய்கையிருந்தால்தான் நம்பிரிதிநிதிகளை நம் கவர்ன்மெண்டு மதிக்கும். நமக்கும் பெருமையும் நன்மையும் உண்டு. இவர்கள் 6-வருடமனுபவித்த செல்வாக்குப் போதாதா? இவர்களேதானா நமது ஜில்லாவில் சட்ட சபைக்கு பாத்தியஸ்தர்கள்? எலக்ஷன்களில் 10000 (ரூபாய்) 20000 செலவு செய்யும் துணிவாலும், ஊருக்கு ஒரு பணக்காரரை வசப்படுத்தி வைத்திருக்கும் தைரியத்தாலும், சுயராஜ்ஜியக் கட்சியில் சேர்ந்து கொண்ட சுத்த புறட்டாலும் தங்களுக்கே ஜயம் கிடைக்குமென்றிருக்கிறார்கள். இவர்கள் ஒரு சமயம் சுயராஜ்ஜியம் வாங்கிக்கொண்டு வந்தாலும் மற்றவர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள் போலும்!

தங்களுக்குச் சபைத் தலைவரால் பேசக் கொடுத்த விஷயத்தை விட்டு விட்டு மந்திரிக் கட்சியையும் அதில் சேர்ந்தவர்களையும் குற்றம் சொல்லுவதே சபையில் பேச்சாக இருந்தது. இதற்குச் சபைத் தலைவர் சீமான் எஸ். சீனிவாசய்யங்கார் அவர்கள் விஷயத்தை மாற்றிப் பேசாதீர்கள் என்று தடுக்காமலும், அதற்கும் பதில் சொல்ல வந்தவர்களைப் பேச விடாமலும், நான் ஒற்றுமைக்கே வந்தேன் என்று சொன்னதும் அவர் மன சாட்சிக்கே விரோதம் என்று அவர் மனதே ஒத்துக்கொள்ளும். இந்த மாதிரி சபையை நடத்தும் சபைத் தலைவரை ஏன் சூழ்ச்சிக்காரர் எனச் சொல்லக்கூடாது? மோதிலால் நேருவின் பதவியைத் தாங்க வருகிறவர் இப்படியிருக்கக்கூடாது. காங்கிரஸ் மீட்டிங்கில் கலகம் உண்டாயிற்று என்ற பெயர் வரக்கூடாது என்ற உத்தேசத்திலிருந்துவிட்டவர்களைப் பாராட்டவேண்டியதே. காங்கிரசின் பெயரைச் சொல்லிக் கொண்டு தாங்களும் அதன் பிரகாரம் நடவாமல், அதன் பிரகாரம் நடக்கப் பிரயத்தனஞ் செய்யாமல், எலக்ஷனுக்காக அநேகரைத் தூஷித்துக் கொண்டும் பலரைக் கெடுக்க பிரசங்கங்கள் செய்துகொண்டும் உத்தியோகம் பெறத் திரிகிறார்களே; மண் குதிரை போன்ற இவர்களை நம்பியா குடியான ஜனங்கள் இறங்கவேண்டும்.?

---

## திருச்சி மருத்துவகுல மகாசபையில்

ராவ் சாகிப் டி. சி. தங்கவேலுப் பிள்ளை தலைமையில் 29-6-26ல் கூடும் கூட்டத்தில் அக்குலத் தலைவரை சட்டசபைக்கு நியமிக்கும் படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளும் விஷயமாய் பேசப்படும்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

# குடி அரசு.

அக்ஷய-ஞூ ஆனி-மீ 13-உ

## நமது பார்ப்பனர் "இரட்டை ஆட்சி" யைக் கொல்ல முயல்வதின் இரகசியம்.

[:]

"இரட்டை ஆட்சி" யென்றால் என்ன என்பது நமது ஜனங்களில் அனேகருக்குத் தெரியாதென்றே சொல்லவேண்டும். இரட்டை ஆட்சியைத் தகர்க்கவேண்டும், ஒழிக்க வேண்டும் என்று பார்ப்பனர்கள் சொல்லும்போது பார்ப்பனரல்லாத பாமர மக்களும் அரசியல் நடை முறையினை அறியாத பல காங்கிரஸ்காரர், பிரசாரகர் என்று சொல்லிக் கொள்பவரும், இரட்டை ஆட்சி என்பதை ஒரு இராணுவ ஆட்சியென்றும் வெள்ளைக்காரரே நேரிலிருந்து செய்யப்படும் காரியமென்றும் இதை ஒழித்துவிட்டால் அரசாங்கம் நம் கைக்கே வந்துவிட்டதென்றும் நினைத்துக்கொண்டு, கூடவே ஒத்துப்பாடுகிறார்கள். இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிற பார்ப்பனர்கள் இரட்டை ஆட்சியை ஒழித்தபிறகு என்ன செய்வதென்று இதுவரையில் ஒரு வார்த்தையும் சொல்லவேயில்லை. பார்ப்பனர்களுக்கு விபூஷணாழ்வார் போல் விளங்கின தேசபந்து தாஸ் அவர்கள் இரட்டை ஆட்சியை ஒழித்த பிறகு என்ன செய்வதென்று சொல்லவேண்டிய அவசியமேற்பட்ட காலத்தில் விண்ணவர்க்கு விருந்தினராகிவிட்டார். ஆதலால் இரட்டை ஆட்சி என்ன வென்பதும், அதை அழித்த பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதும் பாமர ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமான விஷயமாகும்.

தமிழ் நாட்டுப் பார்ப்பனக் கூட்டத்தினரது தந்திரத்தின் சாமர்த்தியமானது நமது பார்ப்பனரல்லாதார் இரட்டை ஆட்சியின் தத்துவம் தெரியாமலே அதை 'அழிக்கிறேன்' என்று சொல்லுகிறவர்களின் பின்னாலிருப்பதும், அவர்கள் ஆட்டுவிக்கிறபடி ஆடவும் குழந்தைகள் போலும் "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பதுபோலும் நடந்து கொள்ளுகிறார்கள். இரட்டை ஆட்சி என்பதன் பொருள் 35-வருஷ காங்கிரஸ் கேட்டுக் கொண்டதற்கிணங்க சர்க்காரால் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு "உரிமை" (பதவி) என்பது பொருள். அஃதாவது "சுய ஆட்சி செலுத்த இந்திய மக்களாகிய நாங்கள் தயாராகிவிட்டோம். ஆதலால் அரசாங்கத்தின் பொறுப்பை எங்கள் வசம் ஒப்புவித்துவிடுங்கள்," என்று நம்முடைய தலைவர்கள் என்போர் சர்க்காரை விண்ணப்ப மூலமாய்க் கேட்டுக்கொண்டதால், அதாவது ஸ்ரீமதி பெசண்டம்மையாரின் ஆதிக்கத்தில் இருந்த காங்கிரசின்போது "19 பேர் விண்ணப்பம்" என்று சொல்லப்பட்ட நமது பிரதிநிதிகளான 'தலைவர்கள்' ஒன்றுகூடி யோசித்துத் தீர்மானஞ் செய்து எழுதி அதில் 19 இந்தியத் 'தலைவர்கள்' கையெழுத்துப் போட்டனுப்பியதும், மாண்டேகு துரைமகனார் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அவரிடம் சமர்ப்பிப்பதன் பொருட்டு பத்து லட்சக்கணக்கான பாமர மக்களிடம் கையெழுத்து வாங்கி சமர்ப்பித்த விண்ணப்பத்திலும் கண்ட விஷயங்களேயாகும். இம்மாதிரிக் கையெழுத்து வாங்க யோசனை கூறியவருள் நமது மகாத்மா காந்தியடிகளும் ஒருவராகும். மாண்டேகு துரையிடம் "நமது தலைவர்கள்" சாக்ஷியம் கூறியபோது, "சில அதிகாரங்களை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள், சில அதிகாரங்களை எங்களுக்குக் கொடுங்கள்,' என்று சொன்னவையே இரட்டை ஆட்சிக்கு ஆதாரமாகும். சர்க்காருக்கு இந்தத் தலைவர்கள் வார்த்தையில் நம்பிக்கையில்லா விட்டாலும், "ஏதோ கொஞ்சம் கொடுத்துப் பார்ப்போம், கொடுக்கப்படும் கொஞ்சத்தையும் இவர்கள் சரியாய் நடத்தாமல் கெடுத்துவிட்டால் என்னசெய்கிறது" என்ற பயத்தின்பேரில், அவர்களுக்குக் கொடுக்கும் அதிகாரத்திலும் தங்களுக்குக்கொஞ்சம் ஆதிக்கமிருக்கவேண்டுமென்னும் கருத்தோடு, "மேற்பார்வை பார்க்கும்" அதிகாரத்துடன் சில இலாக்காக்களின் நிர்வாகத்தைப் பொது ஜனங்களுக்குக் கொடுத்திருப்பதும், சில இலாக்காக்களைத் தாங்களேவைத்துக் கொண்டிருப்பதும், ஆகிய இந்த இரண்டு நிர்வாகத்திற்குமே "இரட்டை ஆட்சி" என்று பெயர். இது நமது காங்கிரஸ் தலைவர்கள் சர்க்காரைக்கேட்டுக்கொண்ட தத்துவப்படியே கொடுக்கப்பட்டிருக்கிறதே யல்லாமல் சர்க்காரிஷ்டப்படி கொடுக்கப்பட்டதல்ல. இதை நமது காங்கிரஸ்காரர்களும் ஏற்றுக்கொண்டதுதான். ஆனால் இது போதாது (inadequate) என்பதாக மட்டும் சொன்னார்களே தவிர இரட்டை ஆட்சித் தத்துவமே கூடாது என்று இதற்குமுன் எப்போதும் சொல்லப்படவேயில்லை. இப்போது "தலைவர்கள்" கான்பூர் காங்கிரஸின் பிரகாரம் கேட்கும் சுயராஜ்யத் திட்டத்தில் சர்க்காருக்கு ஒருவித அதிகாரமுமின்றி முழுப் பொறுப்பையும் கொடுக்கும்படி எவரும் கேட்கவில்லை. இராணுவம், போலீஸ், பொது ஜனங்களின் பத்திரம், சமாதானம், ஒழுங்கு முறைகள் ஆகியவைகளின் பொறுப்பை சர்க்காரே வைத்துக்கொள்ள வேண்டுமென்று தான் சொல்லிக்கொண்டு அவைகள் நீங்கலாக மற்றவைகளைக் கொடுக்கும்படி கேட்கிறார்களே தவிர வேறில்லை. இன்னும் இப்போது வரவு செலவு நிர்வாக இலாக்காக்களையும் சர்க்காரே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்திய சட்ட சபையில் தமிழ் நாட்டுப் பிரதி நிதி சொல்ல ஆரம்பித்து விட்டார். அல்லாமலும் இரட்டை ஆட்சியில் மந்திரிகளுக்குள்ள அதிகாரத்தின்மேல் சர்க்காருக்கு ஆதிக்கம் வேண்டுமெனச் சொல்லி, இந்திய சட்ட சபையிலிருக்கும் ஒரு சென்னைப் பிரதிநிதி கூறி வாதாடியிருக்கிறார். இந்த நிலைமையில் இரட்டை ஆட்சியை ஒழிக்க வேண்டுமென்று சொல்வதன் பொருளென்ன? இதன் இரகசியம் என்னவென்பதை அறிய வேண்டாமா?

அதாவது இரட்டை ஆட்சியைக் காங்கிரஸ் கேட்கும் போதும், "19 பேர்" கையெழுத்துப் போடும் போதும் அதற்காக கிராமம் கிராமமாய்ச் சென்று பாமரமக்களிடம் கையொப்பம்வாங்கும் காலத்திலும் நமது "தலைவர்களான" பார்ப்பனர்களுக்கு பார்ப்பனரல்லாதார் கட்சி ஒன்று முளைக்குமென்றாவது, முளைத்தாலும் தம்மை மீறி மற்றவர்களால் ஓட்டர்கள் ஏமாற்றப்பட்டு அது செல்வாக்குப் பெறுமென்றாவது, அதன் பலன் முற்றிலும் பார்ப்பனர்களே அடைய முடியாது போகுமென்றாவது அவர்களுக்கு அது போழ்து தோன்றவேயில்லை ஆதலால் இதன் பலனாய் ஏற்படும் அதிகாரங்கட்குக் கொழுத்த சம்பளங்களனைத்தையும் தாங்களும் தங்கள் பிள்ளை குட்டிகளும் இனத்தார்களுமே அடையலாமென்ற பேரவாவுடன் தீர்மானித்திருந்தனர். இவ்வளவு கொழுத்த பணத்தையும் அதிகாரத்தையும் பார்த்த பின்னர் இப்போது பார்ப்பனரல்லாதார் இயக்கம், மகமதியர் இயக்கம், கிறிஸ்துவர் இயக்கம், தாழ்த்தப்பட்டவரியக்கம், வகுப்பு வாரிப் பிரதி நிதித்துவ இயக்கம் என இத்தகைய பல இயக்கங்கள் இதன் பயனாகத்தோன்றவும், இவ்வதிகாரங்களும் சம்பளமும் பார்ப்பனர்களுக்கு முழுமையும் கிடைக்காமல் பல வழிகளில் பிரியவும், பல வகுப்புகளுக்குப் போகவும் அதனால் பார்ப்பனர்களுக்கு ஏமாற்ற மேற்பட்டதால், இப்பொழுது பார்ப்பனர்கள் விழித்துக் கொண்டு "முழு அதிகாரங்களும் வெள்ளைக்காரர்களிடமே யிருக்க வேண்டுமே யொழிய, இந்திய மக்கள் கைக்கு வரக்கூடாது; வந்தால் அதற்கு முன் நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த உத்தியோகங்கள் கூட இப்போது கிடைப்பதற்கில்லாமல் பல வகுப்புகளுக்குப் போய் விடுகிறதென்றும், மற்ற வகுப்பாரும் தங்கள் வகுப்பினருக்குச் சமானமாய் வருவதற்கு வழி யேற்பட்டுப் போகிறது" என்றும் நினைத்தே இப்பொழுது ஜனங்களுக்குக் "கொஞ்சமாவது கொடுத்திருப்பதாய்," ச் சொல்லப்படும் அதிகாரத்தையும் வெள்ளைக்காரரே எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கிளர்ச்சி செய்ய இரகசியத்தில் தீர்மானித்துக் கொண்டனர்

என்வே இப்போதுள்ள இரட்டை ஆட்சி ஒழிய வேண்டிய அவசியம் நமது பார்ப்பனர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. கல்கத்தாவில் இரட்டை ஆட்சியை ஒழித்ததற்கு அவசியமாய் நின்ற காரணம், அங்கு மகமதியர்கள் மந்திரி பதவிக்கு வந்து விட்டதாலும்; சென்னையில் இரட்டை ஆட்சி ஒழிக்க வேண்டிய காரணம், இங்கு பார்ப்ப

னரல்லாதார் மந்திரி பதவியை வகித்திருப்பதாலுமே யல்லாமல் வேறல்ல. மத்திய மாகாணத்தில் இரட்டை ஆட்சியை ஒழித்த காரணம் அங்குள்ள ஒரு வகுப்புப் பார்ப்பனர்களுக்கு அதிகாரமில்லாமல் போனதே யாகும். ஆகவே கல்கத்தாவிலும், மத்திய மாகாணத்திலும் இரட்டை ஆட்சியை ஒழித்தாகிவிட்டது; மந்திரியையும் பார்ப்பனரல்லாத மந்திரிகளையும் வீட்டுக்கனுப்பியாகி விட்டது; இனி தமிழ் நாட்டில் ஒழிக்க வேண்டியதுதான் பாக்கியாயிருக்கிறது.

இரட்டை ஆட்சியை ஒழித்த பார்ப்பனர்களின் வேலை யென்ன? முற்கூறிய இரண்டு இடங்களிலும் இரட்டை ஆட்சி அழிந்து மறுபடியும் சர்க்கார் ஆட்சியான ஒத்தை ஆட்சியாக மாறி விட்டது. சென்னையிலும் இரட்டை ஆட்சியை ஒழித்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம்; மந்திரிகளை வீட்டுக்கு அனுப்பி விட்டதாகவும் வைத்துக்கொள்ளுவோம்; பிறகு இந்தப் பார்ப்பனர்கள் சாதிக்கப் போவதென்ன? வரி கொடாமைக்கு வருகிறார்களா? சட்ட மறுப்புக்கு வருகிறார்களா? தேசமே சட்ட மறுப்புக்கு லாயக்கில்லை யென்று காங்கிரசிலேயே வெட்கமில்லாமல் தீர்மானித்து விட்டனர். தேச மக்களை சட்ட மறுப்புக்குத் தயார் செய்யும் வேலையும் காங்கிரசுக்கு இல்லை யென்று "அகில இந்தியத் தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மாயவரம் வாக்காளர் மகா நாட்டில் விளம்பரப்படுத்தி விட்டார். அதாவது "கான்பூர் காங்கிரஸ் திட்டமெல்லாம் சட்ட சபை என்கிற ஒரு அம்சந்தான்" என்று சொல்லி விட்டு, அதில் நம்பிக்கையில்லாதவர்கள்—தீவிர ஒத்துழையாதார்கள்- ஒதுங்கிக் கொள்ளலாம் என்று உத்திரவும் பிறப்பித்து விட்டார். (இவ்விஷயம் 23-6-26வ "சுதேசமித்திரன்" பத்திரிகை 7-ம் பக்கத்தில் வெளி வந்திருக்கிறது.)

ஆகலான், எதற்காக இரட்டை ஆட்சியை ஒழிப்பது? பனகால் ராஜாவும் பாத்ரோவும் சிவஞானமும் பதவி வகிக்கும் இரட்டை ஆட்சியை ஒழிப்பதற்கு வேலை செய்வதற்குப் பதிலாய், ஸ்ரீமான் சர். சி. பி. இராமசாமி ஐயர் வகித்து வரும் ஒத்தை ஆட்சி ஏன் ஒழியக்கூடாது? அதைப்பற்றி நமது பார்ப்பனர்கள் ஒருவார்த்தையாவது பேசுவதேயில்லை. ஏன்? சர். சி.பி. இராமசாமி ஐயர் வகித்திருக்கும் உத்தியோகம் இரட்டை ஆட்சியுமல்ல, ஒத்தை ஆட்சியுமல்ல; அது சுத்தமான—கலப்படமில்லாத—பார்ப்பன ஆட்சி. அதன் பலனைப் பார்ப்பனர் உயர்ந்த ஜாதி என்பதை நிலை நிறுத்தவும், மற்றவர் தீண்டாத ஜாதியார் என்று ஒதுக்கவும் சகல உத்தியோகங்களும் பார்ப்பனரே அனுபவிக்கவும் மிக்க அனுகூலமாயிருக்கிறது. உதாரணமாக இந்த வாரத்தில் 10 ஜில்லா ஜட்ஜி பதவியும் 10 சப் ஜட்ஜி பதவியும் கொழுத்த சம்பளமாகிய மாதம் 1000, 2000 ரூபாயில் சர். சி. பி. இராமசாமி ஐயரால் வழங்கப்பட்டன. யாருக்கு? எல்லாம் பார்ப்பனருக்கு! ஒரு சமயம் அதிலும் இரட்டை ஆட்சி நுழைந்து விட்டால் இருபது ஜட்ஜி பதவிகளும் பார்ப்பனருக்கே கிடைக்குமா?

போலீஸ் இலகாவில் சர். சி. பி. இருப்பதால் "சர்வம் பார்ப்பன மயம் ஜகத்" என்பது போல எல்லா உத்தியோகங்களும் பார்ப்பனருக்கே விநியோகிக்கப் படுகிறது. அதே போல் நீதி இலாகாவிலும் சர். சி. பி. இராமசாமி ஆட்சியிருப்பதால் ஜில்லா முனிசீபுகள் முழுதும் மாதத்திற்கு 20,-30, "சர்வம் பார்ப்பன மயம் ஜகத்" என்று ஏற்படுகிறது. அல்லாமலும் பார்ப்பனப் பிள்ளைகள் படித்துவிட்டு உத்தியோகமில்லாமல் திண்டாடித் திரிவதால் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகவே ஒவ்வொரு தாலூகாவிற்கு இரண்டு மூன்று முனிசீப் கோர்ட்டுகளும் ஒவ்வொரு ஜில்லாவிற்கு இரண்டு மூன்று - நான்கு ஜட்ஜி கோர்ட்டுகளும், அடிஷனல் ஜட்ஜி கோர்ட்டுகளும், சப் கோர்ட்டுகளும் சிருஷ்டிக்க சர். சி. பி. இராமசாமி பிர்ம்மாவாக விளங்குகிறார். இதன் பயன் என்ன? ஊரெங்கும் அக்கிரகாரத் தெருக்களிலுள்ள வீடுகள் தோறும் பார்ப்பன வக்கீல்களின் போர்டுகள் (கருப்புப் பலகை) தொங்கவும் இவர்கள் பிழைக்க ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்களுக்குள்ளாகவே ஒருவர் பேரில் ஒருவர் வழக்குத் தொடர்ந்து மூட்டிக்கொள்ளவும் கைப் பணத்தை பார்ப்பனருக்கு அழுதுவிட்டு தலையில் கையை வைத்துக்கொண்டுபோகவுமே ஏற்படுகிறது. இரட்டை ஆட்சியை ஒழிப்பதன் இரகசியம் பார்ப்பனர் பிழைப்புக்கு வழி தேடுவதற்கே யல்லாமல் வேறொன்றும் அல்லவேயல்ல. அப்படிக் கில்லாதவரை இரட்டை ஆட்சியை ஒழித்துவிட்டு, அதற்குமேல் என்ன செய்வது என்பதைக் கண்டிப்பாய் சொல்லியிருப்பார்கள். இந்தப் பார்ப்பனரிடம் பணம் வாங்கிக்கொண்டு அவர்கள் பின்னால் வாலை ஆட்டிக்கொண்டு பார்ப்பனரல்லாதாரைப் பார்த்து குலைக்கும் கனவான்களையும் உண்மையிலேயே விஷயம் அறியாமல் எப்படியாவது ராஜீய வாழ்வில் தனது பெயர் அடிபட்டால் போதுமென்று நினைத்துத் திரிகிற அப்பாவிகளையும் நாம் ஒன்று கேட்கிறோம். இரட்டை ஆட்சியை எதற்காக அழிப்பது? அழித்துவிட்டதன் மேல் என்ன செய்வது? இரட்டை ஆட்சியை அழித்து ஒத்தை ஆட்சி செலுத்தும்படி, விட்டு விட்ட - விடப்போகிற - கிளர்ச்சி செய்வதை நிறுத்திவிட்டு ஒத்தை ஆட்சியே அழியும்படி செய்தாலென்ன? அல்லது இரட்டை ஆட்சியை அழிப்பது என்கிற வார்த்தையில் அரசியலில் எவ்விதத்திலும் இரட்டை ஆட்சியே கொஞ்சமும் கூடாது என்கிற கருத்து அதில் இருக்கிறதா? அப்படி இல்லையானால் சில அதிகாரங்கள் சர்க்கார் கையிலேயே இருந்துதானே தீரும்.

இரட்டை ஆட்சியை ஒழிக்க இந்திய சட்ட சபைக்குப்போன ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாரும், எ. அரங்கசாமி ஐயங்காரும் இந்திய சட்டசபையில் பேசியதின் அர்த்தமென்ன? இரட்டை ஆட்சியைப்பற்றி இவ்வளவு எழுதியதின் கருத்து இரட்டை ஆட்சியை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம் என்பதைக் காட்டுவதற்கு அல்ல. தற்காலம் நமது நாட்டில் அரசியல் தத்துவத்தில் இரட்டை ஆட்சிக்கும் ஒத்தை ஆட்சிக்கும், தற்கால உத்தியோக காங்கிரஸ் கோரும் பார்ப்பன ஆட்சிக்கும் யாதொரு வித்தியாசமேயில்லையென்பதோடு பார்ப்பன ஆட்சியைவிட இரட்டை ஆட்சி மோசமானதல்ல என்பதுந்தான் நமது அபிப்பிராயம். ஆகலால் மேற்கண்ட மூவாட்சியிலும் ஏழை மக்களுக்கு-கிராமத்துக் குடியானவர்களுக்கு-தொழிலாளர்களுக்கு-யாதொரு நன்மையும் ஏற்படாததோடு. இவைகளின் பலனால் இனியும் அதிகமான கஷ்டம் ஏற்படப்போகிறதென்பதே நமது கருத்து. ஆனால் நம் நிர்வாக சபையிலாகட்டும் மந்திரி சபையிலாகட்டும் மற்ற நீதி இலாக்காக்களிலாகட்டும் ஒத்தை ஆட்சியின் பெயரினாலோ, இரட்டை ஆட்சியின் பெயரினாலோ, நரசிம்மசர்மா, இராமசாமி ஐயர், வெங்கட்டராம சாஸ்திரியார், சீனிவாசய்யங்கார், இராஜகோபால ஆச்சாரியார், மோதிலால் நேரு, மதன்மோகனமாளவியா என்கிற பெயர் உடையவர்கள் இருந்து நடத்தும்படியான ஆட்சியைவிட; வீரய்யன், சௌந்தரபாண்டியன், அப்துல்ரகீம், இன்னுசிமுத்து, வரதராஜுலு என்கிற பெயருடையவர்களிருந்தால் நமது நாட்டில் 6 கோடி மக்கள் கண்ணில் பட-தெருவில் நடக்க-சுவாமி தரிசனம் செய்ய- சுதந்திரமில்லாதவர்களாகவும் 23 கோடி மக்கள் "வேசி மக்கள்" "அடிமைகள்" என்று சொல்லப்படக்கூடியவர்களாகவும் 7 கோடி மக்கள் மிலேச்சர்கள் என்று சொல்லப்படக்கூடியவர்களாகவும், ஈனஜாதிக்காரர்கள் என்று சொல்லப்படக்கூடியவர்களாகவும் இருக்க மாட்டார்கள் என்கிற ஒரே எண்ணந்தான், நமது நாட்டில் எந்த ஆட்சியிருந்தாலும் பார்ப்பனர் ஆட்சி கூடாது என்பதின்-[illegible] நாம் சொல்லுவதின்-முக்கியகருத்து.

---

## கேரள நாட்டில் திரு. நாயக்கர்.

20-6-26-வ ஆலப்பிழையில் நடந்த திருவனந்தபுரத் தொழிலாளர் மகாநாட்டிற்கு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் தலைமை வகித்தார். மகாநாட்டிற்கு சுமார் 2000-ம் மக்கள் வந்திருந்தனர். மகாநாடு வெகு சிறப்பாக நடந்தேறியது.

21-6-26-வ திங்கட்கிழமை எர்ணாகுளத்தில் திரு. நாராயண மேனன் பி. எ., பி. எல்., தலைமையில் "தற்கால காங்கிரஸ்," "கதர்" என்னும் விஷயமாய் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். பெருந்திரளான கூட்டம் கூடியிருந்தது.

22-6-26-வ செவ்வாய்க்கிழமை எர்ணாகுளம் பிராட்வேயில் பழய முனிசிபல் சேர்மென் திரு. கிருஷ்ணப் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் திரு. நயக்கரவர்களால் கதர்சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

---

## திரு. நாயக்கரவர்கள்.

திருத்துரைப் பூண்டியில் நடைபெறும் அகமுடையர் வகுப்பினரின் முதல் மகாநாட்டிற்கு திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களை அழைத்திருப்பதால் 2[illegible]-6-26வ இரவு திரு. நாயக்கரவர்கள் பிரயாணமானார். திருத்துரைப் பூண்டியிலிருந்து ஈரோட்டிற்கு 28-6-26வ இரவு வந்து சேருவார்.

# ஒன்று பட்டாலுண்டு வெற்றி.

## திரு. சக்கரைச் செட்டியாரின் சீரிய கருத்து.

"பார்ப்பனரல்லாதார் எக்கட்சியினராயினும் திரு. ஐயங்கார் வேடத்தை ஒழிக்க ஒன்று பட வேண்டும்."

## சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சி மர்மம்.

திரு. வி. சக்கரைச் செட்டியார் "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் எழுதுகிறார்.

இவ்வூர் சுயராஜியக் கட்சியார் உத்தியோகங்கள் ஏற்றுக்கொள்வதில்லையென்று ஏமாற்றப் பார்ப்பதை பொது மக்களின் அறிவிப்புக்குக் கொண்டுவந்தது போற்றத்தக்கதாகும். ஒத்துழையாமை தவறிவிட்டதன் காரணமாய்த் தேசமிருந்து வரும் நிலைமையில், பரஸ்பர ஒத்துழைப்பே தகுதியானதென்றாலும், இந்தியாவின், பிற பாகங்களில் உத்தியோக மறுப்பில் உண்மையான நம்பிக்கையுடைய சுயராஜியக் கட்சியினர் சிலர் இருக்கிறார்களென்பதையும் நான் அறிவேன். கொள்கை தோல்வியுறினும் அதில் பற்றிக் கொண்டிருப்பவர்கள் நமது மதிப்பிற் குரியவர்களே. ஆனால் திரு. கெல்கார், திரு. ஜெயகர் போன்ற பரஸ்பர ஒத்துழைப்பாளர்களை "அதிகார வர்க்கத்தின் ஆயுதங்கள்" என்று தூற்றிக் கொண்டு அடுத்த தேர்தலில் ஓட்டர்களை ஏமாற்றி சட்ட சபைக்குள் பெரும் பான்மையாய்ப் புகுந்துவிட்டால், தேர்தலுக்குப் பின்னர், பதவிகளை ஏற்றுக்கொள்ள அந்தரங்கமாய் சூழ்ச்சி செய்து கொண்டிருக்கும் உள்ளூர் சிங்கங்களை என்னென்று சொல்வோம்! காங்கரசை ஆட்டி வைக்கும் இச் சூழ்ச்சிக் காரர்களுடைய உள் மர்மத்தை நான் அறிந்தவனாகையால், அவர்களுடைய உண்மையான எண்ணம் இதுதான் என்று பொது மக்களுக்கு நான் உறுதியாய்ச் சொல்லக்கூடும்.

### வெளியேறிய நாடகம்.

இந்த முக்கியமான வேற்றுமையினால் தான், தேசீயக் கட்சியார் சட்ட சபையில் ஒரு சில்லராயிருந்த சுயராஜியக் கட்சியாருடன் சேராமல் ஒதுங்கியிருந்தனர். இவ் விஷயத்தில் அவர்களுக்கு வாக்குறுதி கொடுக்கப்பட்டதன் பிறகே வெளியேறும் நாடகத்துக்குச் சம்மதித்தார்கள். சபர்மதி உடன்படிக்கைக்கு முன்பு பதவி மறுத்தல் கொள்கை நீக்கப்பட்டுப் போகும் என்று அவர்கள் மிகவும் நம்பி யிருந்தார்கள். அந்த நம்பிக்கை சிதறுண்டு போய்விட்டது. ஆனால் கௌகத்திக் காங்கிரசில் தேசீயக் கட்சியார் யோசனையில்லாமல் கழுத்திலிட்டுக்கொண்ட கயிறானது இறுகச் கட்டப்படும்.

### சபர்மதி ராஜி முறிவான காரணம்.

இம் மாகாணத்தில் பிராமணர்களுக்கு அபாயமான நிலைமை யேற்பட்டிராவிட்டால் சென்னை சுயராஜ்யக் கட்சியார் கூட மகிழ்வுடன் சபர்மதி உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டிருப்பார்கள். காங்கரசைச் சேர்ந்த பிராமணரல்லாதார் சுயராஜியக் கட்சி தலைவரான திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்கு இடங் கொடுக்கவில்லை. அவர் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளின் அவரைக் கைவிட்டு விடுவதாகப் பயமுறுத்தினர். திரு. ஐயங்கார் செல்வமுடையவராயினும், ஆத்திரமுடையவராயினும், அவர்களுடைய உதவியின்றேல், அரசியலில் அவர் பூச்சியந்தான்.

### சுயராஜ்ய கட்சியின் கதர் விஸ்வாசம்.

சுயராஜ்யக் கட்சியார் பதவி ஏற்றுக்கொண்டால் மோட்சம் கிடைத்துவிடுமென்று வோட்டர்கள் நம்பவே இல்லை. ஆகவே அவர்கள் அக்கட்சியாருக்கு ஓட்டுக் கொடுக்கமாட்டார்கள். இப்போதே சுயராஜ்யக்கட்சி அபேக்ஷகர்கள் அவர்களுடைய அன்னிய ஆடைகளில் உலவி வருகிறார்கள். கார்பொரேஷனில் இரண்டொரு சுயராஜியக் கட்சி அங்கத்தவர்கள் இன்னும் கதரணியவேயில்லை. அப்படியிருந்தும் நெருப்பவிக்கும் இயந்திரத்தில் வேலை செய்பவர்களைக் கதர் கட்ட அனுமதிக்க முடியாதென்று போலீஸ் கமிஷனர் சொன்னபோது பெருங் கூக்குரலிட்டார்கள். காங்கிரசின் பாலும், ஒத்துழையாமையின் பாலும் உடலளவுகூட விசுவாசங் காட்டாதவர்கள் ஓட்டர்களின் அரசியல் கடவுளர்களாக இப்போது திருத்தப்படுகின்றனர்.

### திரு. ஐயங்காரின் எண்ணம்.

ஸ்ரீமான் ஐயங்கார் காங்கரசையும் சுயராஜ்யத்தையும் சிறிதும் பொருட்படுத்த வில்லையென்பது தான் உண்மை. அதிகாரத்தினின்றும் ஜஸ்டிஸ் கட்சியைத் துரத்தி விட்டு, பின்னர் பிராமணரல்லாதார்களைப் பொது வாழ்க்கையினின்றும், உத்தியோக வாழ்க்கையினின்றும் ஒழித்துவிட வேண்டுமென்ற எண்ணமே அவர்பால் கொழுந்துவிட்டெரிகிறது. ஆறு ஆண்டுகளாய் அவரை மந்திரி சபையினின்றும் ஒதுக்கி வைத்திருந்த பிராமணரல்லாதார்களை அவர் மன்னிக்க ஒருப்படார். பிராமணரல்லாதார்கள் எக் கட்சியினரேயாயினும், காலத்தில் விழித்துக்கொண்டு திரு. ஐயங்காரின் வேடத்தை ஒழிக்க முற்படுவார்களாக. நமது அரசியல் நிலைமை ஏற்கனவே குழப்பப்பட்டிருக்கையில் இழிவான இச் சூழ்ச்சியையும் நாம் அனுமதிப்பதோ?

### காங்கிரஸுக்குக் கேடுகாலம்.

காங்கிரசுக்குக் கேடுகாலம் வந்துவிட்டது. அது கேடுநினைப்பவர்களிடம் சிக்கியிருக்கிறது. நெஞ்சம் ஒன்று நினைக்க நாவொன்று பேசுவோர்களிடம் அகப்பட்டு உழலுகிறது. அப்படியிருந்தும் சுயராஜ்யம் நெருங்கி வருவதைக் காணும் மனிதர் இவர்தானும்! இந்த கேவலமான ஒழுக்கமற்ற நிலைமையிலிருந்தே ஒரு காலத்தில் உயர் நிலையிலிருந்த காங்கரஸ் எத்துணை கேவலமாய்விட்டதென்று விளங்கும். உண்மை மறைந்து போய் விட்டது. கேவலமான வஞ்சனை அவ்விடத்தில் ஆண்டுவருகிறது. சுயராஜ்யக் கட்சி "பூனை" இப்போது வெளிவந்துவிட்டது. அது எந்த வகைபூனை? கொடிய நயவஞ்சனை கொண்ட பூனை! அப்படியிருந்தும் அது உறுமும் சிங்கமென்று கருதப்படுகிறது. இந்த "பூனை"யின் இறுதி என்னாகுமென்று இனித்தான் தெரியவேண்டும்.

---

### ஈரோடு மஹாஜன ஹைஸ்கூல்.

இந்த உயர்தர கல்லூரியின் பரிசளிப்பு விழா 2-7-26-ந் தேதி வெள்ளிக்கிழமை சென்னை மாகாணக் கல்வி இலாகா மந்திரி கனம் சர். ஏ. பரசுராமதாஸ் பாத்ரோ அவர்கள் தலைமையில் நடைபெறும்.

---

மதுரை நகரத்தொகுதி சட்டசபை மெம்பரான ராவ் சாஹிப் கே. வி. இராமாச்சாரி அவர்கள் விண்ணுற்றதைக் குறித்து மதுரை காந்தி சதுக்கத்தில் ஜனாப் ஹாஜிமுகம்மது மௌலானா சாயப் தலைமையில் ஒரு அனுதாபக் கூட்டம் கூடியது.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம் நாட்டுப் பொருள் அந்நியத் துணியால் 60 கோடி போகிறது. அதை நிறுத்தலாம். ஏழை மக்களுக்கு கஞ்சிவார்த்த பலனை அடையலாம். இத்தனை அனுகூலம் கதராடைகட்டுவதால் உண்டாகும். நாம் கதர் கட்டி ஏழைகளைக் காப்பாற்றும் தர்மம் மேலா; பாயாசத்திற்கு பர்தாமிப் பருப்பு இல்லை யென்பவர்களுக்கு சமாராதனை செய்வது மேலா; என்பதை ஆராய்ந்து பாருங்கள். கதர் கொஞ்சம் விலை அதிகமென்று எண்ணக்கூடாது. ஒரு நாள் காப்பி குடிப்பதை நிறுத்தினால் ஒரு கொத்து வேஷ்டி நஷ்டத்தைச் சரிக்கட்டலாம். ஒரு நாளைக்கு நாடகத்துக்குப் போகாதிருந்தால் ஒரு கொத்து வேஷ்டியே வாங்கிவிடலாம். ஒரு நாளைக்கு வக்கீல் வீட்டிற்குப்போகாதிருந்தால் ஒரு குடும்பத்திற்கு ஒரு வருஷத்திற்கு வேண்டிய கதர் துணி வாங்கிவிடலாம். ஆகையால் எல்லோரும் கதர் கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இதுவரை நான் சொல்லிவந்த விஷயங்கள் பூராவும் தற்கால நிலைமையில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பொருத்ததாகையால் உண்மையை உணர்ந்து உங்கள் புத்திக்கு சரி என்று தோன்றியபடி நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் இத்துடன் பேச்சை நிறுத்திக்கொள்ளுகிறேன் என்று பேசி முடித்தார். பிறகு தமிழ் மாகாண கதர் போர்டு செக்ரட்டரி ஸ்ரீமான் எஸ். இராமநாதன் அவர்கள் கதரைப்பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார்.

பிறகு ஒரு பிராமண வக்கீல் எழுந்து கோபிசெட்டிபாளையத்தில் பிராமணர்-பிராமணரல்லாத வித்தியாசமில்லை யென்றும், இவர்கள் வேறு இடங்களில் நடந்ததைச் சொல்லியிருக்கிறார்கள், என்றும் யாரும் அதை வேறு அர்த்தம் செய்துகொள்ளக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டார். அதற்குள் ஒருவர் எழுந்து, இந்த ஊரில் பிராமணர் பிராமணரல்லாதாருக்குள் சமத்துவம் அதிகம் என்று ஐயர் சொல்லுகிறார், அதை சந்தியாவந்தனப்படித்துறையில் பார்த்தால்தான் இந்த ஊர் பிராமண, பிராமணரல்லாதார் ஒற்றுமை தெரியும் என்றார். அத்துடன் ஐயர் அடங்கினார்.

கடைசியாக ஸ்ரீமான் சுப்பண்ண ஆச்சாரியார் அக்கிராசனர், உபன்யாசகர் எல்லோருக்கும் வந்தனம் கூறும் போது, ஐயர் வித்தியாசமில்லை என்று சொன்னார், ஆனால் தன் டோராக் காரனை அக்கிராரத்திற்குள் விடவில்லை என்றும் பேசிய பிறகு இரவு 9-மணிக்கு மாகாநாடு முடிவுற்றது.

---


## மதனகேசரி.

### இணையற்ற மகா தாதுபுஷ்டி லேகியம்.

இது அபார சக்தி வாய்ந்தது. தேகம் வலுக்கும். மூளை, இருதயம், குண்டிக்காய்களுக்கு வலுவேற்றும். நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்தும். அபரிமிதமான தாது விருத்தி, இரத்த விருத்தி, போக சித்தி உண்டாக்கும். தாது புஷ்டிக்கு நிகரற்ற மகா உயர்ந்த சாலாமிசிரி சஞ்சீவி இதுவே. 1 டின் ரூ. 3. வி. பி. அணா 5.

பிராஜானுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெயரை வைத்துக்கொண்டுதான்சுயராஜ்யக் கட்சி தமிழ் நாட்டில் நடந்து வந்தது. அவரும் இப்போது உண்மை அறிந்து விலகப் போகிறார். இனி, சுயராஜ்யக்கட்சி தமிழ் நாட்டிலும் சாகவேண்டியது தான். ஆனால் அவரை விலக்கு வாங்க பிரயத்தனம்செய்கிறார்கள். வடஇந்தியாவில் பம்பாய்வரை சுயராஜ்யக்கட்சி செத்துவிட்டதென்றே சொல்லலாம். வடநாட்டில் இந்து முஸ்லீம் கலவரம்; தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் கலவரம். இந்த நிலைமையில் வகுப்புப் பிணக்குஇல்லையென்று மறைத்து வைப்பதில் என்ன பிரயோஜனம்.

## தற்கால காங்கிரஸ் உத்தியோகத்திற்கு மனுப்போடும் தபாற் பெட்டி.

தியாக உணர்ச்சி நிறைந்திருந்த காங்கிரஸ்போய்விட்டது. 35-வருஷத்திய பழய உத்தியோக காங்கிரஸ்இப்போதுதலையெடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஆகையால்தான் தற்கால காங்கிரஸ் தொலைந்து ஒத்துழையாமைக் காங்கிரஸ் உண்டாக வேண்டுமென்று சொல்லுகிறேன். மகாத்மா காந்தி காங்கிரஸ் மாறியதால்தான் மகாத்மா நம்மை விட்டுப் போய் மூலையில் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார். இப்போதைய காங்கிரஸ் உத்தியோகத்திற்கு மனு போடும் தபால் பெட்டி. மகாத்மா காந்திபடிகள் தான் ஒத்துழையாமைத் தத்துவத்தை காங்கிரசில் புகுத்தினர். அது சமயம் காங்கிரஸினிடத்தில் ஜனங்களுக்கும் நம்பிக்கையிருந்தது. ஒத்துழையாத் திட்டம் வந்ததினால் அநேகம் சுயநலக் காரர்களுக்கும் உத்தியோக வேட்டைக் காரர்களுக்கும் உயர்ந்த ஜாதி என்று சொல்லுபவர்களுக்கும் காக்கிரசில் இடமில்லாமல் போயிற்று. ஆதலால் அவர்கள் இப்போது பழைய உத்தியோக காங்கிரஸைக் கொண்டுவந்து விட்டார்கள்.

## நான் வகுப்பு உரிமை கேட்கக் காரணம்.

காங்கிரசிலும் முஸ்லீம் லீக் சபைஏற்பட்டு அவர்களுக்கென தனிப்பிரதிநிதித்துவமிருக்கிறது. அதற்குக் காரணம்,முஸ்லீம்களின் வகுப்புநலத்தை நாடுவதேயாகும். அதுபோல் பிராமணரல்லாதாருக்கும் காங்கிரசில் தனிப் பங்கு வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். நமது உரிமை நமக்கு வந்துவிட வேண்டும். சென்னை மாகாணச் சங்கம் நமது உரிமை விதத்தைக் கவனிப்பதற்காகவே ஏற்பட்டது, நாளைக்கு சுயாராஜ்யம் வந்தாலும் நமது நிலைமை என்ன! வெள்ளைக்கார அடிமை நீங்கி பிராமணரின் அடிமை ஆவதா, என்பது தான் எனது கேள்வி. மகாத்மாவின் ஒத்துழையாத் திட்டம் நாட்டில் அமலுக்கு வந்திருக்குமானால் நான் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டிருக்கமாட்டேன். மகாத்மாவின் நிர்மாணத் திட்டம் நிறைவேறினால் சண்டைக்கு வழியில்லாமற் போகும். இப்போது மகாத்மாவின் திட்டங்கள் மாறிப்போகவே, எப்படி ஒருவகுப்பார் ஆதிக்கம் பெறுவது—-உத்தியோகம் சம்பாதிக்கிறதென்கிற நிலைமை வந்துவிட்டது. ஆதலால் சண்டை ஏற்படவேண்டியிருக்கிறது.

## பதவி ஆசை யாருக்கில்லை?

கஷ்டப்பட்ட காலத்தில் கஷ்டத்திற்குப் பங்கெடுத்துக் கொள்வாரில்லை; லாபத்திற்கு மட்டிலும் பங்குத் தகரார் வந்துவிட்டது. உத்தியோக ஆசையில்லாத தலைவர்கள் இப்போது காங்கிரசில் இல்லை. ஸ்ரீமான்கள் டி.ஏ. இராமலிங்கம் செட்டியாரும் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரும் காங்கிரசில் இருக்கிறார்களே, அவர்களும் உத்தியோக ஆசைக்காரர்களா, என்று கேட்கிறீர்கள். ஆம்! அவர்களும் உத்தியோகத்திற்கு இரகசியமாய் உள்ளுக்குள் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் கண்ட்றாக்டு பேசி ஏற்பாடு செய்து கொண்டுதான் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து இருக்கின்றனர்; சும்மாயிருக்கவில்லை. இன்றைக்கும் அவர்கள் ஹிருதயத்தில் வகுப்பு நலன் துடித்துக்கொண்டுதானிருக்கும். என்ன செய்வார்கள் பாவம்! எப்படியிருந்தால் இதுசமயம் தங்கள் காரியம் ஆகும் என்பது தெரிந்துதான் சமயம் போல் நடக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பழய காங்கிரஸை உண்டாக்கப் பார்க்கின்றனர். காரணமென்ன? பழைய காங்கிரஸ் ஏற்படுத்தியபோதே அதன் மூல மந்திரம் உத்தியோகம் பெறுவதுதான்.

## சீர்திருத்தத்தா லுண்டான லாடம்.

உத்தியோக காங்கிரசின் பலனால் நமது நாட்டிற்கு சீர்திருத்தம் இரண்டு தடவை சர்க்காரால் கொடுக்கப்பட்டது. முதல் சீர் திருத்தம்வந்ததும் இந்து-முஸ்லீம் கலகம் ஏற்பட்டது. சம்பளங்களை உயர்த்தியதால் வரியதிகமாய் செய்யப்பட்டது. 2-வது சீர் திருத்தமும்வந்து நமக்கு என்ன கிடைத்தது? பிராமணர் பிராமணரல்லாதார் கக்ஷியை உண்டாக்கிற்று. மீண்டும் வரி உயர்ந்தது. இந்தச் சீர்திருத்தங்கள் காங்கிரசில் போட்ட சத்தத்தால் ஏற்பட்டது. உத்தியோக காங்கிரஸ் இல்லாதிருந்தால் நாட்டிற்கு இத்தனை கெடுதல் ஏற்பட்டிருக்காது. உத்தியோக காங்கிரஸ் இல்லாதபோது 50, 60 கோடி ரூபாய்தான் நாம் வரிகொடுத்து வந்தோம். உத்தியோக காங்கிரஸ் பெற்ற சீர் திருத்தத்தின் பலனால் இப்போது 150 கோடி கொடுக்க வேண்டியதாகிவிட்டது. காங்கிரஸ் இல்லாதபோது 24கோடி ரூபாயில் வைத்திருந்த ராணுவச் செலவு, உத்தியோக காங்கிரசில் சீர் திருத்தம் வேண்டுமெனப் படித்தவர்கள் சத்தம் போட்டதால் இன்றைக்கு 70 கோடி ரூபாய் ராணுவச் செலவில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்தனையும் ஏழைகள் பணந்தான். 1000-க்கு 5-பேர் தான் பணக்காரர்களாயிருப்பார்கள். அவர்கள் வரி கொடுப்பதைப் பற்றிக் கவலை யில்லை. தேசத்தில் 1000க்கு 900பேர் 10ரூபாய்க்கு கீழ்பட்ட வரிகொடுப்போராயிருக்கிறார்கள். அவர்கள் வரி கொடுப்பது தான் சர்க்கார் வரும்படி. இரண்டாவது சீர்திருத்தத்தால் வரி உயர்ந்தது. ராணுவச் செலவு அதிகமாயிற்று; சம்பளங்கள் உயர்ந்தது; 3 பைசா கார்டு அரையணாவாயிற்று; உத்தியோகச் சண்டைகள் மலிந்தன; ஒவ்வொரு ஜாதியாருக்குள் எனக்கு-உனக்கு என்ற சண்டைகள் மிகுந்தன; இந்த உத்தியோகங்களும் நியமனங்களும் எலக்ஷன்களும் இல்லையானால் சண்டையே இல்லை. இதற்குமுன் ஒரு கவர்னர், 2 நிர்வாக சபை மெம்பர் ஆகமூவர் ஒரு மாகாணத்தை ஆண்டுவந்தார்கள். சுமார் 20 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் நமது மாகாணக் கவர்ன்மெண்டு நடந்து வந்தது. உத்தியோக காங்கிரசின் பலனாக 3 மந்திரி, 4 நிர்வாக சபை மெம்பர், ஆக 7 பேர் மிகுந்துவிட்டார்கள். ஆள் ஒன்றுக்கு 5500 ரூ. வீதம் சம்பளத்தில் நமது மாகாணம் நிர்வாகிக்கப் படவேண்டியதாகிவிட்டது. இந்த சம்பளம் ஏழைகள் தலையில் கைவைத்து அவர்களிடம் வசூல் செய்யப்படுகிறது. இத்தனை கெடுதலும் படித்த பிராமணர் வகுப்பால் வந்தது. ஆகையால்தான் மகாத்மா இந்தக் குறைகளை மாற்றவேண்டுமென்று சொன்னார்.

## எல்லாம் ஏமாற்றமே.

இப்போது உங்களிடம் ஓட்டுக் கேட்பவர்கள், "அவன் சட்ட சபைக்குப் போனான் ஒன்றும் செய்யவில்லை, இவன் போனான் ஒன்றும் செய்யவில்லை, நான் போகிறேன் பண்ணிப்போடுகிறேன்," என்று உங்களை "முட்டாள்கள்" என்று நினைத்துக்கொண்டு சொல்லுகின்றனர். வேளாளப் பிரபுக்கள் ஏமாற்ற மடையக்கூடாது. அவர்கள் சொல்வது பொய். அங்கு யார் போனாலும் உங்களுக்கு ஒன்றும் செய்யமுடியாது. அதில் தங்களுக்கு உத்தியோகம் தேடிக்கொள்ளத் தான் முடியும். அதற்கு நீங்கள்தான் அதிக வரி கொடுக்கவேண்டி வரும். சட்ட சபையில் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லி வெளியில் வந்தவர்கள் மறுபடி எதற்காகப் போகவேண்டும்?

## சுயராஜ்யமென்றால் என்ன?

நமது மகாத்மா காந்திபடிகள் தமது "சுயராஜ்ய"த்திற்கு இன்னும் அர்த்தம் சொல்லவில்லை. ராஜப் பிரதிநிதி கேட்டபோது கூட அவர் சொல்லவில்லை. சுயராஜ்யம் கிடைத்தால் அதை அடைய யோக்கியதை வேண்டுமென்றுதான் நிர்மாணத் திட்டத்தையே "சுயராஜ்யம்" என்று சொன்னார். அதை விட்டுவிட்டு உத்தியோகம் அடைவதை சுயராஜியம் என்று உங்களை பிராமணர்கள் ஏமாற்றுகிறார்கள். நாம் உண்மையை உணரவேண்டும். உண்மையை எடுத்துச் சொல்லவேண்டும். உண்மையை எடுத்துச் சொல்வதில் என்ன வந்தாலும் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். நம் பயித்தியகாரத்தனம் நீங்கவேண்டும் இப்போது நாளுக்கு நாள் "மகாத்மா காந்தியென்பவர் ஒருவர் இருந்தார்," என்று சொல்லும் ஸ்திதிக்குக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். இப்போது நமதுயோக்கியதை என்ன என்பதுதான் நமது கவலை. நாம் இத்தனை கஷ்டப்பட்ட ஒத்துழையாமைக்காங்கிரசின் பலனை சுயநலக்காரர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளவிடுவதா என்பதுதான் எனது கவலை.

## வித்தியாசம் ஒழிய வேண்டும்.

மறுபடியும் எதாவது ஒத்துழையாமை இயக்கத்திற்குப் புத்துயிரளிக்க வழியுண்டா என்பதுதான் இனி யோசிக்கவேண்டிய வேலை. பெருமைக்கு ஆசைவேண்டாம். பெருமை யென்றால், பணத்தாலும் சதையாலும் பலத்தாலும் உண்டாகக்கூடியதல்ல. மகாத்மாவை நாம் எதற்காக மதிக்கிறோம்? அவருடைய உத்தமமான கொள்கைக்காகவே.'இந்த ராஜாங்க முறை சரியல்ல,இதை தகர்த்துவிட வேண்டு'மென்று நாம் சொல்

லும்போது, 'நமது தற்கால காங்கிரஸ் முறைசரியல்ல, அதை ஒழித்து ஒத்துழையாமைக் காங்கிரசை மீண்டும் உண்டாக்கவேண்டு' மென்று ஏன் நாம் சொல்லக்கூடாது? இத்தனை பலமுள்ள கவர்ன்மெண்டு முறையை ஒழிக்கும் சக்தி நமக்கிருக்குமானல் தற்கால உத்தியோக காங்கிரஸ் முறையை நாம் ஏன் ஒழித்துவிட முடியாது? நாமும் மனிதரென்று சொல்லிக்கொள்ளுகிறோமே தவிர, உண்மையில் அதற்கு அர்த்தமில்லை. உத்தியோகக் காங்கிரசால் நமது பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு ஏற்படுகிற தடைகள் பூராவும் நீக்கப்பட வேண்டும். மனிதனுக்கு மனிதன் வித்தியாசமிருக்கக் கூடாது, சம உரிமை வேண்டும் என்கிற காங்கிரசை ஏற்படுத்த வேண்டும்.

நமக்குள் வித்தியாசமில்லை யென்று மூடி வைப்பதனல் என்ன நன்மை ஏற்படும்? இப்பொழுதிருக்கும் நிலைமையில் பிராமணராயிருந்தாலும் யாராயிருந்தாலும் இந்த வித்தியாசங்களை ஒழிக்க முதலில் பாடுபட வேண்டும். நாம் இந்த வித்தியாசங்களை மறைத்து வைத்தாலும் நம் சந்ததியார்கள் காலத்தில் கலவரம் வந்தே தீரும். அவர்கள் காலத்திலாவது இந்த வித்தியாசம் ஒழிந்தேதான் தீரவேண்டும். விடுதலை வேண்டுமானல் முதலில் இந்த வித்தியாசங்களை ஒழிக்கவேண்டியது முதல் வேலையாகும். 100-கு 97 பேர் 'சூத்திரர்' 'தாசிமக்கள்' 'அடிமைகள்' என்ற வித்தியாசம் இன்னும் ஒரு வகுப்பாரிடம் இருந்து கொண்டிருக்கிறது. இவைகள் ஒழிய வேண்டாமா? ஏன் இவைகளை ஒழிக்கக்கூடாது?

## உயர்வு தாழ்வு நிலைக்குமா?

உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? ஒரு தாழ்ந்த ஜாதியானுடம்பில் இருப்பதும் ரத்தந்தான், நமது நண்பர் தாலூகா போர்டு தலைவர் ஸ்ரீமான் ராஜுக்கவுண்டரவர்கள் உடம்பிலிருப்பதும் ரத்தந்தான், ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் உடம்பிலிருப்பதும் ரத்தந்தான். இம் மூன்று ரத்தத்திற்கும் என்ன வித்தியாசம்? இன்றைக்கு பெரிய ஜாதியாரென்று தாழ்ந்த ஜாதியாரை அவமதிக்கிறார்கள். அதே 'பஞ்சமன்' கிறிஸ்து மதத்தில் சேர்ந்து கொஞ்சம் படித்து 'டானியல்' என்று பெயர்வைத்துக்கொண்டு ஒரு ரிவினியூ இன்ஸ்பெக்டராக வந்தால் பெரிய ஜாதி மணியகார் குனிந்து கும்பிட்டுவிட்டுக் கூப்பிட்ட விடத்திற்கெல்லாம் கட்டைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு பின்னல் ஓடுவார். வைதிகப் பிராமணன் ஒருவன் ரிவினியூ இன்ஸ்பெக்டராக வந்தால் ஒரு பஞ்சமன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்து வேறு பெயர் கொண்டு டிப்டி கலெக்டராக வந்துவிட்டால் சாஸ்திரியான இன்ஸ்பெக்டர் கும்பிட்டுக் கூப்பிட்ட இடமெல்லாம் பின்னல் ஓடுவார். இந்த வித்தியாசங்கள் அப்பொழுது எங்கே போய்விடுகிறதென்றுதான் நான் கேட்கிறேன். இன்றைக்கு நாம் இதே நிலையில் இருந்துவிடலாமென்றால் அது நிலைக்குமா? உதாரணமாக ஒரு ரூபாய் இன்னெருவனிடமிருக்கும் பணத்தைச் ரூபாய்க் கெலித்துவிட்டால் தோற்றவன் விடுவானா? மீண்டும் ரூபாய்க் கெலிக்கத்தான் கூப்பிடுவான். மரியாதையாய்க் கெலித்தவன் கூடாடாமல் கெலித்த பணத்தைக்கொண்டு ஓட்டம்பிடிக்கப்பார்த்தால் அவனை உதைத்தாவது கொலை செய்தாவது அந்தப்பணத்தைப் பிடுங்கிக்கொள்ளஎண்ணுவான. அதுபோல இன்றைக்கொரு கூட்டத்தார் உயர்ந்த ஜாதியாராகிவிட்டால் மற்றவர்கள் நாலைக்குப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? ஒருவரை ஒருவர் உதைத்தாவது சமத்துவம் தேட எண்ணமுண்டாகும்.

## ஜஸ்டிஸ் கட்சியில்லாவிட்டால்......

பிராமணரல்லாதார் கட்சியை சில சுயநலக்காரர்களும் பிராமணப் பத்திரிகைகளும் பிராமணத் தலைவர்களும் போனவிடங்களிலெல்லாம் எழுத்தினலும் சொல்லினலும் தூற்றி வருகின்றனர். இன்றைக்கு பிராமணரல்லாதார் கட்சி யில்லாவிட்டால் நம் பிராமணரல்லாதார் நிலை எப்படியிருந்திருக்கும்? நமது மகமது உஸ்மான் அவர்களும் சிவஞானம் பிள்ளையவர்களும் இந்த உயர்ந்த ஸ்தானத்திலிருக்க முடியுமா? நமது வீரையன் சட்டசபைக்குப் போயிருக்க முடியுமா? இதை நன்றாக யோசித்துப்பாருங்கள். நான் இந்த இடத்தில் வந்துபேச எனக்கு வழியேற்பட்டிருக்குமா? ஸ்ரீமான் ராஜுக்கவுண்டரும் பட்டக்காரரும் பிரசிடெண்டாக முடியுமா? இவைகளையும் யோசித்துப் பாருங்கள். ஆதலால் பிராமணரல்லாதார் கட்சி யில்லாவிட்டால் பிராமணரல்லாதார் பாடு இன்னும் ஆபத்தாய் போயிருக்கும்.

## தீண்டாமை வளர்ந்த விதம்.

உயர்வு தாழ்வு வித்தியாசங்கள் பிராமணரிடத்தில் மாத்திரம் இல்லை. பிராமணரல்லாதாரிடத்திலும் இந்த வித்தியாசம் இருந்துதானிருக்கிறது. நாம் பிராமணர்களை மட்டும் ஏன் சொல்லுகிறோமென்று நீங்கள் கேட்கலாம். அவர்கள்தான் வழி காட்ட வேண்டும். முடிச்சுப் போட்டவன் அவிழ்த்தால் சீக்கிரம் அவிழ்க்கலாம். பிராமணர் பார்த்து விமோஜனம் செய்வதானல் சீக்கிரம் ஒழிந்துவிடும். காரணம், இவர்களைப் பார்த்துத்தான் மற்ற ஜாதியார் காப்பியடித்தார்கள். எங்கள் ஊரில் தண்ணீர் குழாயை பிராமணப்பெண்கள் கால் குடம் தண்ணீர் கொண்டுவந்து குழாயைக் கழுவித் தண்ணீர் எடுப்பதைப் பார்த்த பிராமணரல்லாத பெண்கள் அரைக்குடம் தண்ணீர்விட்டு குழாயைக்கழுவுகிறார்கள். இதைப் பார்த்த மகமதியப் பெண்கள் தாங்களும் முக்கால்குடம் தண்ணீர் ஊற்றிக்கழுவ ஆரம்பித்துவிட்டார்கள். நாம் பார்த்து வித்தியாசங்களை ஒழித்தால் ஏன் ஒழியாது? கல்லைச் சாமியாக்கும் நமது மந்திரங்கள் ஏன் தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்களாக்க முடியாது? தாழ்ந்தவர்களை உயர்ந்தவர்களாக்க முடியாத மந்திரம், கல்லை எப்படி சுவாமியாக்கும் என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. காசியிலிருக்கும் சுவாமியை எல்லோரும் கட்டித் தழுவிக் கும்பிடலாம். மதுரையிலிருக்கிற சுவாமிமாத்திரம் நாடார் கோயிலுக்குள் வந்தால் ஓடிவிடுமாம். தனது பக்தர்கள் கோயிலுக்குள் வந்தால் ஓடிப்போகும்படியான சுவாமிக்குநம்மைக்காப்பாற்றும் சக்தி எப்படிவரும்? அப்படி மனிதரைக் கண்டு ஓடும் சுவாமியைக்கும்பிட்டாலென்ன? திருப்பிப் போட்டு வேஷ்டி துவைத்தாலென்ன? நாம் பார்த்து சுவாமியையும் பயித்தியகாரத்தனமாக்கி விடுகிறோம். கடவுளுக்கு வித்தியாசமான மனிதர்களில்லை யென்பதை நீங்கள் உணரவேண்டும்.

## சுயராஜ்யம் யாருக்கு வேண்டும்?

ஜமீன்தாரர்களுக்கும் பணக்காரர்களுக்கும் சுயராஜ்யம் வேண்டியதில்லை. ஏழைகளுக்குத்தான் சுயராஜ்யம் வேண்டும். சில கவுண்டர்கள் பணக்காரர்களா யிருக்கலாம். நமது பெரும்பான்மையான வேளாள மக்கள் நிலைமை என்ன? ஒரு போலீஸ்காரன் 'சுமையைத் தூக்கு' என்றால், உடனே தூக்கவேண்டும். தூக்காமல் கொஞ்சம் ஆக்ஷேபித்தால், போலீஸ்காரன் பட்டையைக்கழட்டி ஓங்கினல், 'எடுப்பதற்குள் என்னையா அவசரம்' என்றுதான் பதில் சொல்லுகிறார்கள். நம்நாட்டில் இன்றைக்கு விவசாயத்தில் சம்பாதிப்பவர்களெல்லாம் வேளாளர்களே யாகும். ஆனல் அவர்கள் சம்பாதித்து, அதை மற்றவர் அனுபவிக்கச்செய்து விடுகிறார்கள். வேளாளமக்கள் சம்பாதிப்பது பூராவும் வக்கீல் வீட்டுக்கும் கோர்ட்டுக்கும் போய் விடுகிறது. அவர்களில்லாவிட்டால் வியாபாரமேது? இத்தனை வக்கீல்களேது? ஆகையால் சுயராஜ்யம் அவ்வித ஏழைகளுக்குத்தான் வேண்டும் என்பது மகாத்மாவின் நோக்கமாகும். ஒரு சி. பி. ராமஸ்வாமி ஐயருக்கும் ஒரு சிவஞானம் பிள்ளைக்கும் ஆயிரக்கணக்கான சம்பளம் கிடைத்தால் ஏழைகளுக்கு என்ன பலன் உண்டு. ஏழைமக்களுடைய க்ஷேமத்திற்குரிய சுயராஜ்யம்தான் நமக்கு வேண்டும். ஏழைகளுக்காக உயிரைக்கொடுக்கும் தியாகிகளே தேசத்திற்குத் தேவை. நாம் யாரையும் சுலபமாக நம்பி விடுகிறோம். அம்மாதிரி நம்பி இனி ஏமாற முடியாது. சி. பி. ராமசாமி ஐயர் ஸ்தானத்தில் வீரய்யனிருந்திருந்தால் கல்பாத்தி உத்தரவுக்கு ராமசாமி அய்யர் அர்த்தம் செய்ததுபோல் செய்திருப்பாரா என்பதை எல்லோரும் கவனிக்கவேண்டும். இதுவரை நான் சொல்லிவந்ததை யாரும் வித்தியாசமாக நினைக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு வகுப்புத்துவேஷத்தை உண்டாக்க வேண்டுமென்கிற எண்ணமில்லை. வெள்ளம்வருமுன் அணைபோடவேண்டுமென்பது தான் என்னுடைய நோக்கமாகும்.

## கதர்.

ஏழைகளுக்கு சுயராஜ்யம் வேண்டுமென்றுதான் மாகாத்மா காந்தியடிகள் தமது சுயராஜ்யத் திட்டத்தில் இராட்டினத்தையும் கதரையும்பிரதானமாக வைத்தார். ஏழைகளின் பசிக்கொடுமை தீரவேண்டுமென்பதுதான் மகாத்மாவின் முக்கிய நோக்கம். நம் நாட்டில் வீட்டுத்தொழில்கள் மறைந்துபோனதால் ஏராளமான ஜனங்கள் கஞ்சிக்கு வாடுகின்றனர்; மலைகளுக்கு ஓடிப்பிழைக்க வழிபார்க்கின்றனர். நாம் கதர் கட்டவும் நூல்நூற்கவும் ஆரம்பித்தால் ஏழைகள் பசி ஆறும். வீட்டில் தொழிலில்லாததினல் கிராமத்துப் பெண்கள் புல்லையும் கட்டையும் எடுத்துக்கொண்டு டவுன்களில்போய் கற்பிழந்துவிட சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடுகிறது. ராட்டினத்தை நாம் விர்த்திசெய்தால் கற்பும் கெடாது. கஞ்சிக்கும்வழியுண்டு, புண்ணியமும் உண்டு,

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## சூலூர் போர்டு மிடில் ஸ்கூல் திறப்பு விழா.

மகா-ள-ள-ஸ்ரீ ராவ் சாகிப் C. S. இரத்தின சபாபதி முதலியார் ஷை போர்டு மிடில் ஸ்கூலை சென்ற 9-6-26-ல் புதவாரம் திறந்து வைத்தார். இத்திருக் கொண்டாட்டத்திற்கு கோவை, பல்லடம், திருப்பூர் முதலிய விடங்களிலிருந்து பெருங்கூட்டத்தினர் விஜயஞ் செய்திருந்தனர். அவர்களில் முக்கியஸ்தர்கள் ஸ்ரீமான்கள் கோவை பூமைப் செட்டியார், அருணாசலம் செட்டியார், லக்ஷ்மணசாமித் தேவர், C. V. வெங்கட்டரமண ஐயங்கார் எம். எல். ஸி, A. T லக்ஷ்மணசாமி முதலியார், சுப்பையா செட்டியார், முத்துகுமாரசாமி கவுண்டர், லக்ஷ்மணசாமி, நாயக்கர், முத்துசாமி செட்டியார், M. கிரியப்பா, சாமுவேல்பிள்ளை, ராஜகோபால்நாயுடு, கோவிந்தராஜலு நாயுடு, S. L. ஸ்ரீகண்ட அய்யர், வெங்கடாசலகவுண்டர், சூலூர்யூனியன் போர்டு பிரசிடெண்டு திரு கருப்பண தேவரும் மற்ற யூனியன் போர்டு மெம்பர்களும் இவர்கட்கு விருந்து நடத்தி மேள வாத்தியத்துடன் அழகாய் அலங்கரிக்கப்பட்ட ஸ்கூல் கட்டிடத்திற்கு அழைத்து வந்து ஸ்ரீமான் முதலியார் அவர்களை மேடையின் மீது அமரச்செய்தனர். கடவுள் வணக்கம் செய்து பிள்ளைகளால் கும்மி கோலாட்டம் முதலியன நடத்தி யூனியன் போர்டார் சார்பாக திரு. ராமசாமி தேவர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுத்தார். திரு, கருப்பணத்தேவர் இனிய தமிழில் திரு. முதலியார் அவர்களை இப்புதுப் பாடசாலையை ஸ்தாபனம் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். திரு முதலியார் அவர்கள் எழுந்து நீண்டதோர் பிரசங்கம்செய்தார். கல்வியின் தற்கால சீர் கேட்டையும், தொழிற் கல்வியின் அவசியத்தையும் விரிவாகப் பேசி ஸ்கூலை ஸ்தாபனம செய்தார். பல பிள்ளைகள் தங்கள் பெயர்களை தாக்கல் செய்து கொண்டனர். முதலியார் அவர்களுக்கும் கூட்டத்தினருக்கும் மாலை சூட்டி வந்தன வழிபாடு கூறினதும் சிற்றுண்டிக் கச்சேரி நடந்தது. போட்டோ பிடித்தார்கள். மாலை 6-மணிக்கு கூட்டம் கலைந்தது. இப்பாடசாலைக்கு திரு. E. T. பாலகிருஷ்ண முதலியாரை தலைமை உபாத்தியாயராக நியமித்திருக்கிறார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.


## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்ட்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா<br>
மோட்டார் இன்ஜினீயரிங் ஒர்க்ஸ்,<br>
மைலாப்பூர்-மதருஸ்.


### "தேசபக்தன்".

இவ்வேட்டின் ஐந்தாவது திங்களில் சொந்த அச்சுக்கூடம் இல்லாதவரையில் சரிவர பத்திரிகையை நடாத்த இயலா தென்பதை விளக்கியும், விரைவில் அச்சுக்கூடம் வாங்கி பத்திரிகையை வெளியிடப்படும் என்ற ஒரு தலை கூறியும் எழுதியிருந்தோம், நேயர்கள் பலர் சஞ்சிகை வெளிவராத காரணங்கேட்கின்றனர். மூன்று திங்களுள் தெய்வீகளைத்திகடச் செய்ய பெரிதும்முயன்று வருகிறேன். அதுகாறும் நேயர்கள் பொறுத்து மன்னிக்கு மாறு வேண்டுகிறேன் என்று திருச்சி, பொன்மலையிலிருந்து இச்சஞ்சிகையின் ஆசிரியர் அறிவிக்கிறார்.

## மதிப்புரை.

### "ஸ்ரீ வைஷ்ணவன்."

ஸ்ரீ வைஷ்ணவன் என்னும் சமயப் பெயர் கொண்ட மாதப் பத்திரிகையின் முதலாண்டின் 5 பிரதிகளும் நமது பார்வைக்கு வரப்பெற்றோம். வைணவ சம்பிரதாய சம்பந்தமான பல அரிய கட்டுரைகள் இப் பத்திரிகையை அலங்கரிக்கின்றன. "நீதித் திரட்டு" என்ற தலைப்பின் கீழ் துண்டுதுண்டாகப்பொறிக்கப்பட்டுள்ளவிஷயமும் நல்லொழுக்கத்தையும் சமயப் பற்றையும் ஊட்டுவனவாயிருக்கின்றன. இதன் ஆசிரியர் டி. ஆர். பெரிய நம்பியா பிள்ளை அவர்கள் குறிப்பிட்டிருப்பது போன்று, "இப் பத்திரிகையில் தெய்வநிந்தனையும் மத தூஷணைகளும் சாஸ்திர விரோதமானவைகளும், ஆபாசமான விஷயங்களும் வீண் வேடிக்கை உண்டுபண்ணத் தக்கவைகளும் எழுதப் பெறாவாம்." வைணவ சமய சம்பந்தமான ஆராய்ச்சி விஷயங்களும் வெளி வருகின்றன. வைணவ சமயத்தைத் தழுவுவோரேயன்றி பிற சமயத்தினரும் இப் பத்திரிகையைப் பார்த்து வருவரேல் அவ்வச் சமயத்திலுள்ள நுட்பங்களைத் தெரிந்துகொள்ளலாம். இதன் வருட சந்தா ரூபாய் ஒன்று.

டி. ஆர். பெரியநம்பியா பிள்ளை,<br>
ஆசிரியர், "ஸ்ரீ வைஷ்ணவன்,"<br>
84 தெற்குப் புதுத்தெரு, திருநெல்வேலி.

### "யௌவன பாரதன்"

தூத்துக்குடியினின்று வெளிவரும் "யௌவன பாரதன்" என்னும் மாதம் இருமுறைப் பதிப்புப் பத்திரிகையின் முதலாம் இதழ் வரப் பெற்றோம். இப்பத்திரிகை கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியுள்ள பாரதமக்களின் முன்னேற்றம் காடி தோற்றுவிக்கப் பட்டதாகும். நல்ல படிப்பாளிகளால் எழுதப்படும் பல வியாசங்களும் வர்த்தமானக் குறிப்புகளும் இப்பத்திரிகையில் வெளியாகின்றன. இதன் ஆசிரியர் திரு. ஜே. பி. ரொட்ரிகஸ் என்பவராகும். வருட சந்தா ரூ. 4.

மானேஜர், "யௌவனபாரதன்" தூத்துக்குடி.

### "அன்பு".

"அன்பு" என்னும் அழகிய பெயர் கொண்ட அன்பான மாதப் பத்திரிகையின் முதற்கொடியில் புஷ்பித்த முதலாம் மலர் வரப்பெற்றோம். 'அன்புக்கு முண்டோ அடைக்குந்தாள்' என்பதற்கிணங்க தமிழ் மக்கள் மாட்டும், அவர் சம் மொழியின் மாட்டும் அளவுகடந்த அன்பு செலுத்தும் திருவாளர் அ. மு. சாமிநாதப் புலவர் அவர்கள் இதன் ஆசிரியராவார். உயர்ந்த நடையும் சிறந்த கருத்துங் கொண்ட எழுதுகோலை உடையவர் நமது புலவர். அன்பு என்னும் பெயருக்கேற்ப பல செவ்விய விஷயங்கள் இப்பத்திரிகையில் தலை சிறந்து மிளிர்கின்றன. தமிழர் இதை ஆதரிப்பார்களாக. வருட சந்தா ரூ. 5—0—0

நிருவாகி:— "அன்பு", 18-, 4 பார் வீதி, இரங்கூன்.


ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்த்ரஜோதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டேயிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0<br>
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0<br>
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும் பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0<br>
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,<br>
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,<br>
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.

பண்டித எஸ். எஸ் ஆனந்தரின்

## மஹாசந்த்ரஜோதித்தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!<br>
வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம்மகா சந்த்ரஜோதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0<br>
12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0<br>
6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,<br>
220 தங்கசாலைத் தெரு, சென்னை

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

## அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாஜிஸ்ட்ரேட், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்எரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குற்றவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.




12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இருமுறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

## சத்திய வேத வீரியதாது லேகியம்.

20-நாள் 40-வேளைக்கு விலை ரூ. 2.

தேகாரோக்கியம் குன்றி, தேகம் வெளுத்து உட்காரவும் எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு சுறு சுறுப்பு, புஷ்டி, ஆண்மை முதலியவற்றை ஊட்டும். மூத்திரச் சூடு, சுக்கில சிராவகம், கல்லடைப்பு, குழிப்புண் உஷ்ணப்புண், அஸ்தி உருக்கம் முதலிய பயங்கர வியாதிகளின் ஆணி வேரைக்கெல்லி யெறிந்து தாதுவை கெட்டிப்படுத்தி தேகத்தை வனப்புறச்செய்யும் கைகண்ட ஔஷதம் சத்திய வேத வீரிய தாதுலேகியம் ஒன்றே.

விலாசம் தெரியப்படுத்தினால் சத்திய வேத வைத்திய சாலையில் செய்யப்படும் சகல வியாதிகளையும் போக்கும் மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் அனுப்பபடும்.

குறிப்பு:— டாக்டர் ஜி. எல். சாமி அவர்கள் திருச்சினாப்பள்ளி இடத்தெருவில் தருமதமிழ் சித்த வைத்திய சாலை ஒன்று நடத்தி வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கானவியாதியஸ்தர்கள் இனமாக மருந்து வாங்கி சாப்பிட்டு குணமடைந்து வருகிறார்கள்.

டாக்டர். ஜி. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வாகநேரி—திருச்சினாப்பள்ளி.

இனாம்! இனாம்!

### உயர்ந்த விசித்திரமான 15 சாமான்கள் கொடுக்கப்படும்.

அமெரிக்கா தேசத்தில் சித்திர வேலைகளுடன் தயார் செய்யப்பட்ட 18 காரட் கோல்டு பிளேட்டட் ரிஸ்ட்லெட் கெடியாரம் தற்கால நாகரீகத்துக்கேற்ற மனோரம்மியமான பலவித விசித்திர பட்டைகள் தீர்த்து பள பளப்பான டயலும் உள்ளது. நெடுகாலைக்கு உழைக்கக்கூடியது. உரத்த சாமான்களால் செய்யப்பட்டது. இக் கெடியாரம் தருவிப்பவர்களுக்கும் கீழ்கண்ட சாமான்கள் இனாம்: மோதிரம் 1, கூந்தல் எண்ணெய் புட்டி 1, பட்டர் ப்ளை 1, பொத்தான் 4, உயர்ந்த கைகுட்டை 1, தந்த சீப்பு 1, சென்ட் பாட்டல் 1, பிரேஸ்லெட் 1, சிகரெட் கேஸ் 1. சேப்டி பின் செட் 1, விசித்திர பொம்மை 1. கெடியாரம் விலை 7—12—0



விலாசம்:-எஸ். ஆர். கிருஷ்ண அண்டு கம்பெனி, நெ. 1 தம்புநாயக்கன் தெருவு மதராஸ்

## சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த நேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தை நிலைநாட்டுவான் பொருட்டு போராடுவதற்கென, வெளிவருவது.

வருட சந்தா தபாற்செலவுடன் ரூ. 2

வீ. அருணாசலம்,

நெ. 52. செட்டித் தெரு, கொழும்பு.

## பிரமேக குல சம்ஹாரி.

பலவித நரம்புத் தடிப்புகள், 21 விதமேக ரோகம், 7-வித வெள்ளை ரோகம், ரணம் அரையாப்பு, சூலை, வாதம் முதலிய தீராத கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,

திருச்செங்கோடு. (தென் இந்தியா)

## இந்தியர் கஷ்ட நிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது — ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கோள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கேடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0
இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கேடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0
இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

ஷை பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணையும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயர்ச்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதி விருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய் திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.